# 1

"போலாமா ராஜா..?" என்றாள் வைஷ்ணவி.

தூரத்தில் மாமல்லபுரக் கடல் இரைச்ச லிட்டுக் கரையோடு மல்யுத்தம் செய்து கொண்டிருக்க பல்லவ சிற்பங்கள் சாயங்கால இருட்டுக்குள் கரைந்து கொண்டிருந்தன.

ராஜா என்கிற அந்த ராஜேந்திரன் "ஊஹூம்.. இன்னும் கொஞ்ச நேரம்.." என்றபடி வைஷ்ணவியின் தோள் பட்டையைத் தன் தோளால் இழைந்தபடி நெருக்கி உட்கார்ந்தான்.

வைஷ்ணவி விசுக்கென்று எழுந்தாள்.

"இந்த மாதிரியான சில்மிஷ விளையாட்டுதான் எனக்குப் பிடிக்காது.. இருட்ட ஆரம்பிச்சாலே உங்களுக்கு துணிச்சல் வந்துவிடும்.. ம்.. புறப்படுங்க.."

"ப்ளீஸ் வைஷ்ணவி. இன்னும் பதினைந்து நிமிஷம்.."

"ஊ..ஹூம்.."

"இன்னும் பத்து நிமிஷம்.."

"ஊ..ஹூம்.."

"அஞ்சு.."

"ஊ..ஹூம்.. இனி ஒரு செகண்ட் கூட உங்க பக்கத்துல உட்கார மாட்டேன்.. கிளம்புங்க சீக்கிரம்.."



"நான் வரலை.."

"அப்போ நீங்க இங்கேயே உட்கார்ந்துட்டிருங்க. நான் காருக்குப் போறேன்.. நீங்க எந்திரிச்சு வர்ற வரைக்கும் நான் கார்ல உட்கார்ந்திருக்கேன்.."

சொல்லிக் கொண்டே தூரத்தில் நிறுத்தியிருந்த காரை நோக்கி மெதுவாக நடக்க ஆரம்பித்தாள் வைஷ்ணவி.

வைஷ்ணவி என்ற பெயரைப் படித்ததும் பல பேருக்கு கர்நாடகமாய்த் தோன்றலாம். பெயர்தான் மூர்மார்க்கெட் பழமை. வைஷ்ணவியைப் பார்த்தால் அசந்து போய் விடுவீர்கள். எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அழகாய்த் தெரியக் கூடிய பெண் வைஷ்ணவி என்று நான் சொன்னால் அது நிஜமான வார்த்தை. கொஞ்சம் குங்குமப் பூவை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு டம்ளர் பாலில் போடுங்கள். இளஞ்சிவப்பாய் ஒரு நிறம் பிறக்கும். அந்த நிறம்தான் வைஷ்ணவியின் நிறம். அவளுடைய கண்களை யாரும் தப்பித் தவறிக்கூட நேராய்ப் பார்த்து விடாதீர்கள். ஷாக் அடிக்கும். வைஷ்ணவியின் கன்னம், உதடு, கழுத்து, கழுத்துக்குக் கீழ்ப்பட்ட பிரதேசங்கள் எல்லாவற்றையும் வர்ணிக்க ஆசைதான். அடுத்தவன் காதலியைப் பற்றி வர்ணிக்க நீ யாரய்யான்னு ஏக வசனத்தில் சத்தம் போடுவான். எனவே வாபஸ். மற்ற விபரங்களை வேண்டுமானால் சொல்கிறேன்.

வைஷ்ணவிக்கு சொந்த ஊர்

ராமநாதபுரம் ஜில்லா திருவாடானை. அப்பா சபாநாயகம். நித்யகல்யாணி மில்லில் பிட்டராய் வேலை பார்த்து ரிடையராகி இனிமேல் பிழைப்புக்கு என்ன பண்ணப் போகிறோம் என்கிற அதிர்ச்சியில் இறந்து போக.. அம்மாவை ஏற்கனவே இழந்து விட்ட வைஷ்ணவி ஊரில் இருக்கப் பிடிக்காமல் மெட்ராஸ் வந்து யாருடைய சிபாரிசும் இல்லாமல் ஒரு ரெப்யூட்டட் கம்பெனியில் ரிசப்ஷனிஸ்ட்டாய் சேர்ந்தாள். கோடம்பாக்கம் சூளைமேட்டுப் பகுதியில் 2000 ரூபாய் வாடகையில் ஒரு வீட்டையும் பிடித்தாள். அவளுடைய கம்பெனியின் எம்.டி.யைப் பார்த்துப் பேச அடிக்கடி ஆபிஸ் வந்த ராஜேந்திரனின் மனதிலும் இடம் பிடித்தாள். வைஷ்ணவியைப் பற்றி இவ்வளவு போதும். இனி ராஜேந்திரன்?

ராஜேந்திரன் வைஷ்ணவியின் அழகுக்கு ஈடு கொடுத்து நின்றான். சிகரெட் வாசனை பட்டால் 'தலையை வலிக்கிறது' என்பான். விஸ்கி சாப்பிடுபவர்களை பாவாத்மாவாய் நினைப்பான். பிசினஸ் விஷயத்தில் அபார ஞானம். அப்பா சந்திரசேகரனை நிற்க வைத்து தாண்டுவான். வருஷக் கடைசியில் கம்பெனியின் பாலன்ஸ் ஷீட்டைப் பார்க்கிற அவர் ராஜேந்திரனைக் கட்டிப் பிடித்து வளர்ந்த மகன் என்றுகூடப் பார்க்காமல் போர்டு மீட்டிங்கிலேயே எல்லோருக்கும் முன்னால் பச்சக் என்று முத்தமிடுவார்.. 'மை சன். மை சன்..' என்று சிவாஜி பாணியில் புளகாங்கிதம் அடைவார். ராஜேந்திரன்



எதையுமே ஆழமய் நேசிக்கிற ரகம். அவன் நட்டு பட்டுப் போன ரோஜாச் செடியைப் பற்றி 30 ராத்திரி கவலைப் பட்டான். வைஷ்ணவியின் முகத்தில் ஒரு கவலை மேகம் தெரிந்தாலும் துடித்துப் போகிற ஆத்மா இவன்.

"வைஷ்ணவி நில்லு போகாதே.."

"நான் போறேன்.. நீங்க எப்பவோ வாங்க.."

"மை டியர் மைனாவே.." கடற்கரை மணலில் தபதபவென்று ஓடி வந்து அவளுடைய தோளைப் பற்றி நிறுத்தினான் ராஜேந்திரன்.

"தமிழ் சினிமா பார்த்து ரொம்பவும் கெட்டுப் போயிட்டீங்க.. ஒரு ஹீரோ பண்ற கோமாளித் தனத்தையெல்லாம் எம் முன்னாடி பண்ணாதீங்க. எரிச்சல் வருது.. என் கூடவே சாப்டா நடந்து வாங்க.."

வந்தான்.

ரோட்டோரமாய் நிறுத்தியிருந்த காரை நெருங்கினார்கள்.

சாக்லேட் நிற மாருதி கார் அது. டிரைவிங் சீட்டில் பாய்ந்து ஏறப்போன ராஜேந்திரனை..

"ராஜா.." என்று பதட்டமாய் சத்தம் போட்டு நிறுத்தினாள் வைஷ்ணவி.

"என்ன வைஷ்ணவி..?"

"காரோட பின் சீட்ல பாருங்க.."

பார்த்தான்.

யாரோ படுத்திருந்தார்கள். விலுக்கென்று அதிர்ந்த ராஜேந்திரன் ஏற்றப் பட்டிருந்த கண்ணாடி வழியே உள்ளே பார்த்தான். சிவப்பு நிற டீ-ஷர்ட். அழுக்கான வெள்ளை பேண்ட். சம்மர் கிராப். லீக்கோ கரி நிறம். இத்யாதி கோலங்களோடும் ஒரு பேட்டை ரவுடிக்கான சகலவிதமான அம்சங்களோடும் அவன் தெரிந்தான்.

கண்ணாடியை தட்டினான் ராஜேந்திரன்.

"ஏய்.. யாரது உள்ளே..."

அவன் அசையாது படுத்திருந்தான்.

"ஏய்.."

மறுபடியும் கண்ணாடிக் கதவைப் படபடவென்று தட்டினான் ரோஜேந்திரன். கோபத்தில் முகம் சிவப்பேறியிருந்தது. வைஷ்ணவி அவன் தோளைப் பற்றிக் கொண்டாள்.

"என்ன ராஜா. அவன் பார்க்கறதுக்கு முரடன் மாதிரி இருக்கான். துணைக்கு யாராச்சும் இன்னொருத்தரை கூப்பிட்டு அவனை எழுப்புங்க.."

"யாரும் வேண்டியதில்லை வைஷ்ணவி. அவனை நானே எழுப்பறேன் பார்.." ராஜேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே காருக்குள் படுத்திருந்த அவன் மெல்லப் புரண்டு எழுந்தான். நீளமாய்க் கொட்டாவி விட்டுக் கொண்டே குனிந்து



கண்ணாடி வழியே பார்த்தான்.

ராஜேந்திரன் கோபமாய் வெடித்தான்.

"என்னய்யா பார்க்கறே.. வெளியே வாய்யா..." ராஜேந்திரனின் கத்தலைப் பொருட்படுத்தாமல் சோம்பலாய் அசைந்து கதவின் கைப்பிடியைத்திருகி வெளியே வந்தான். நல்ல உயரத்தில் இருந்தான்.

அவன் "சாரி சார்.." என்று சொன்னபோது மட்ட ரகமான விஸ்கி புளிச்சென்று நாறியது. ராஜேந்திரனுக்கு வயிற்றைப் புரட்டியது. வயிற்றுப் புரட்டலை அடக்கிக் கொண்டு கேட்டன். "யோவ்.. யாருய்யா உன்னை கார்ல ஏறிப் படுத்துக்கச் சொன்னது?"

"யாரும் சொல்லலை. நானாகத்தான் ஏறிப் படுத்துகிட்டேன். சரக்கு சாப்பிட்டது செமமப்பு. காரோட கதவைத் திறந்து பார்த்தேன். தெறந்திச்சு. ஏறிப் படுத்தேன். தூங்கிட்டேன்" சொல்லிக் கொண்டே அவன் காதோரமாய் செருகியிருந்த பீடியை எடுத்து உதட்டின் இடுக்கல் சொருகிக் கொண்டான்.

"டேய்.." என்றவனைக் கையால் அமர்த்தி விட்டு மெல்லிய குரலில் கேட்டான் அவன். "குட்டி யாரு. படு ஷோக்கா இருக்கா. உம்பொஞ்சாதியா.. இல்லே தள்ளிக்கிட்டு வந்த கேஸா..?"

"என்னடா சொன்னே...?"

"ராஜா... பொறுங்க.. பொறுங்க.." என்று கத்தக் கத்த அவன் மேல் காட்டுத்தனமாய்ப் பாய்ந்தான் ராஜேந்திரன்.

ரோட்டோரமாய்க் கொட்டியிருந்த பீச் மணலில் இருவரும் புரண்டார்கள். ராஜேந்திரனின் ஆக்ரோஷமான குத்துக் களைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவன் திணற, ரோட்டை விட்டுத் தள்ளியிருந்த தமிழ்நாடு டூரிஸம் செண்டரிலிருந்து ஆட்கள் ஓடி வந்தார்கள்.

நிமிஷ நேர சண்டைக்குப் பிறகுதான் இருவரையும் பிரிக்க முடிந்தது. அதற்குள் ராஜேந்திரனின் சட்டை தோள்பட்டை அருகே சேதமாகியிருந்தது. கன்னப் பரப்பில் லேசாய் ஒரு சிராய்ப்பை வாங்கியிருந்தான். வாய்க்குள் ரத்தம் கரிப்பாய் இருக்கத் துப்பினான்.

"என்ன சார் என்ன சண்டை....?" கேள்வி கேட்பவர்களுக்கு பதிலைச் சொல்லாமல் ராஜேந்திரன் அந்த ரௌடிப் பேர்வழியையே முகம் விடைக்கப் பார்த்தான். வைஷ்ணவி தான் அவர்களுக்குப் பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

டூரிஸம் ஆசாமிகள் வைஷ்ணவி சொன்னதைக் கேட்டுவிட்டு ராஜேந்திரன் பக்கம் திரும்பினார்கள்.

"டீஸண்ட்டா இருக்கீங்க. நீங்க ஏன் சார் அவன்கிட்டப் போய் சண்டை போடறீங்க.. அவன் என்னமோ பேசிட்டுப் போகட்டும்.."

"அப்படியெல்லாம் என்னால சும்மா இருக்க முடியாது. அவன் ரௌடியா இருந்தா அதுக்காக பயந்துட்டுப் போக முடியுமா?



இங்கே போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கு..?"

ராஜேந்திரன் சொல்ல அந்த ரௌடிப் பேர்வழி சிரித்தான். "என்னம்மா கண்ணு போலீஸ்ல கம்ப்ளைண்ட் தரப்போறியா. வா போகலாம். போலீஸ் ஸ்டேஷனுக்கு எப்படிப் போகணும்னு நான் வழி சொல்றேன்.."

"விவகாரத்தைப் பெரிசு பண்ணாமே போங்க சார். இருட்டிட்டு வருது. பொண்ணோட வந்திருக்கீங்க. இந்தாம்மா.. நீயே அவருக்கு எடுத்துச் சொல்லிக் கூட்டிகிட்டுப் போம்மா...." டூரிஸம் ஆசாமி கள் சொல்ல ராஜேந்திரன் தீர்மானமாய் தலையை ஆட்டினான். "நோ.. நோ.. நான் இதை விடப் போவதில்லை.."

"அதுக்கப்புறம் உங்க இஷ்டம் சார்.. நேரா போய் வலது பக்கம் திரும்புங்க. போலீஸ் ஸ்டேஷன் வரும்."

ராஜேந்திரன் தன்னுடைய காருக்குள் ஏறி உட்கார்ந்தான்.

வைஷ்ணவி அவனோடு உட்கார்ந்து கதவைச் சாத்திக் கொண்டதும் கார் புறப்பட்டது. ரௌடிப் பேர்வழி கத்தினான்.

"நீ முன்னாடி போய் கம்ப்ளைண்ட் கொடு சார். நான் பொடி நடையா பின்னாடியே வந்துடறேன். ஸ்டேஷன்ல போய் விவரமா பேசிப்போம்.." போய்க் கொண்டிருந்த காரைப் பார்த்தபடியே லேசான தள்ளாட்டத் தோடு நடந்தான் அவன்.

காரை ஓட்டிக் கொண்டிருந்த ராஜேந்திரனை மெதுவாய்த் தொட்டாள் வைஷ்ணவி. "ராஜா.."

"ம்.."

"துஷ்டனைக் கண்டால் தூர விலகுன்னு சொல்லுவாங்க. அவனைப்போய் ஒரு சரி மனுஷனா நினைச்சு கம்ப்ளைண்ட் தரணுமா..? வேண்டாம். நாம மெட்றாஸ் போயிடுவோம்.."

ராஜேந்திரன் அவள் பக்கமாய் திரும்பினான். "வைஷ்ணவி அவன் கார்ல ஏறிப் படுத்தது பத்திக்கூட எனக்குக் கோபமில்ல.. உன்னெப் பார்த்து என்ன வார்த்தை சொன்னான்னு கவனிச்சியா..?"

"சொன்னா சொல்லிட்டுப் போறான் விடுங்க..."

"நான் விட மாட்டேன்.."

ரோட்டின் வலது பக்கம் கார் திரும்பினதும் கட்டம் கட்டமாய் சிவப்பு பெயிண்ட் அடித்து போலீஸ் ஸ்டேஷன் எதிர்ப்பட காரை சரக் கென்று அதன் வாசலில் நிறுத்தினான் ராஜேந்திரன்.

"ராஜா சொன்னாக் கேளுங்க."

"பேசாம எம்பின்னாடி இறங்கி வா.."

கதவை அறைந்து சாத்திவிட்டு ஸ்டேஷன் வாசற்படி ஏறிய ராஜேந்திரன் நேர் எதிரே உட்கார்ந்து புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டருக்கு



முன்னால் வந்து நின்றான்.

"குட்ஈவினிங் இன்ஸ்பெக்டர்."

"எஸ்." இனஸ்பெக்டர் கனைத்து ஒரு குறுக்கமான முகத்தோடு ராஜேந்திரனைப் பார்த்தார். அவன் தட்டி விட்ட டேப்ரிக்கார்டர் போல அனைத்தையும் சொன்னான். இன்ஸ்பெக்டர் சலனமில்லாமல் கேட்டு விட்டு உதடுகளை அசைத்தார்.

"அந்த ரௌடி இப்போ எங்கே இருக்கான்.."

"நீங்க முன்னாடி ஸ்டேஷனுக்குப் போங்க. நான் பின்னாடியே வந்துடறேன்னு ரொம்ப திமிறாய்ச் சொன்னான் சார்.."

இன்ஸ்பெக்டர் பக்கவாட்டில் நின்றிருந்த கான்ஸ்டபிளிடம் திரும்பினார். "யாரய்யா அவன். அவ்வளவு திமிறாப் பேசறவன்..."

கான்ஸ்டபிள் சொல்ல வாயைத்திறந்த அதே விநாடி "வணக்கம் இன்ஸ்பெக்டர் சார்.."

இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்தார். ராஜேந்திரனை மறந்தார்.

"வா ராஜாக்கிளி. எங்கே ரெண்டு மூணு நாளா காணோம். மெட்ராஸ் போயிட்டியா..?"

"ஆமா சார். கட்சித் தலைவர் என்னைக் கையோட கூட்டிட்டு வரச் சொல்லி ஆள் விட்டுட்டார். போகாம இருக்க முடியுமா என்ன? போயிட்டு மத்தியானந்தான் வந்தேன்.." என்று சொல்லிக் கொண்டே

ராஜேந்திரனை கிண்டலாய் ஏறிட்டான்.

"என்ன சார் கம்ப்ளைண்ட் முடிச்சாச்சா?"

ராஜேந்திரன் இன்ஸ்பெக்டரை ஏறிட்டான்.

"இன்ஸ்பெக்டர். என்கிட்ட வம்பு பண்ணின ஆள் இவன்தான்.." அவன் சொல்லச் சொல்ல இன்ஸ்பெக்டர் ராஜாக் கிளியின் பக்கம் திரும்பி மெல்லக் கோபித்துக் கொண்டார்.

"என்ன ராஜாக்கிளி இதெல்லாம்..?"

அவன் சிரித்தான். "இன்ஸ்பெக்டர் சார். போன மாசம் ஒரு ஞாயித்துக்கிழமை மகாபலிபுரத்துக்கு எவனோ ஒருத்தன் ஒருத்தியைக் கூட்டிகிட்டு வந்து அவளை கடல்ல தள்ளிக் கொன்னுட்டுப் போன நாள்லேயிருந்து நான் எந்த ஜோடியைப் பார்த்தாலும் கல்யாணமானதா.. இல்லே பலான ஜோலியான்னு விசாரிச்சுக்குவேன். இன்னிக்கும் அப்படித்தான் விசாரிச்சேன். சாருக்கு கோபம் பொத்துகிட்டு வந்து என்னை மண்ணுல போட்டுப் புரட்டி எடுத்துட்டார்.."

இன்ஸ்பெக்டர் ராஜேந்திரனை அழைத்துக் கொண்டு தனியாய் ஒதுக்கினார். "சார். இந்த ராஜாக்கிளிக்கு அரசியல் மட்டத்துல நல்ல செல்வாக்கு இருக்கு. நீங்க அவன் மேல கம்ப்ளைண்ட் கொடுத்தா அதோட பாதிப்பு உங்களுக்குத்தான். ராஜாக்கிளி இந்த ஏரியாவுக்கு செக்யூரிட்டி மாதிரி. இந்த ஒரு



வருஷத்துல இங்கே திருட்டே நடந்ததில்ல. சில சமயம் அடாவடித்தனம் பண்ணுவான். இதை நாங்க பெரிசு படுத்த மாட்டோம். நீங்க கூட்டிகிட்டு வந்த பொண்ணு கிட்ட அவன் ஒண்ணும் தப்பா நடந்துக்கலையே..?"

"தப்பா நடந்துக்கிட்டாதான் ஆக்ஷன் எடுப்பீங்களா இன்ஸ்பெக்டர்?" ராஜேந்திரன் வார்த்தைகளில் கோபத்தோடு கேட்டான்.

"இதோ பாருங்க மிஸ்டர். சில சமயங்கள்ல என்னோட பொஸிஷன் ரொம்பவும் டெலிகேட்டாயிருது. இந்த ராஜாக்கிளி மேல ஆக்ஷன் எடுத்தா ரெண்டே நாள்ல எனக்கு ட்ரான்ஸ்பர் ஆர்டர் வந்திரும். நான் பேமிலி மேன். இப்பதான் என்னோட பொண்ணையும், பையனையும் அரும்பாடுபட்டு ஸ்கூல்ல சேர்த்திருக்கேன்.. ஆக்ஷன் எடுக்கறது சுலபம். அதனோட பலனை அனுபவிக்கறது கஷ்டம்."

ராஜேந்திரன் படபடத்தான். "காக்கி யூனிபார்மைப் போட்டிருக்கற நீங்களே ஒரு ரௌடி ஆசாமிக்குப் பயந்தா என்னை மாதிரியான சிவிலியன் என்ன சார் பண்ண முடியும். நீங்க சட்டத்தைக் கையில எடுத்துகிட்டு ஏன்ட்டி சோஷியல் எலிமெண்ட்டுக்குப் பயந்தா அந்த சட்டத்தை ஒரு சிவிலியன் ஹேண்டில் பண்ணி தண்டனை தர வேண்டிய கட்டாயம் வந்திரும். நான் உங்களுக்காக இவனை விட்டுட்டுப் போறேன். வா வைஷ்ணவி போகலாம்.."

ராஜேந்திரன் படபடவென்று பொரிந்து விட்டு ஸ்டேஷனுக்கு வெளியே நிறுத்தி-யிருந்த காரை நோக்கிப் போனான்.

வைஷ்ணவி மிரண்ட பார்வையோடு அவனைத் தொடர்ந்தாள். ராஜாக்கிளி மோவாயைச் சொறிந்தபடி சத்யராஜ்போல் புன்னகை பூத்தான்.

## 2

**ம**றுநாள் சாயந்திரம் ஆறு மணி.

11எ பஸ்ஸைப் பிடித்து தி.நகர் டெர்மினஸில் இறங்கிக் கொண்ட வைஷ்ணவி வழக்கம்போல ராஜேந்திரனின் காருக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள். கிருஷ்ணவேணி தியேட்டரில் புதிதாய் வந்திருந்த விஜய் படத்துக்காகக் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. பெண்கள் கவுண்டரில் ஒரு யுத்தமே நடந்தது.

'ஜனங்களை நாசம் பண்ணுகிற விஷயத்தில் இந்த சினிமா முதலிடம். எனக்கு மட்டும் ஒரு நாள் இந்த தேசத்தோட பிரதமர் பதவி கொடுத்தால் என்னோட முதல் பிரகடனம் இந்த சினிமா தியேட்டர்களையும் சினிமா ஸ்டூடியோக்களையும் பாக்டரிகளாக மாத்தச் சொல்லி உத்தரவு போடுவேன். அரிதாரத்தைப் பூசிக்கிட்டு ஜிகினா டிரஸ்ஸை மாட்டிகிட்டு கோணங்கித்தனமா ஆடிப்பாடுற அந்த ஹீரோ ஹீரோயின்களை ஜனங்க எந்த ரசனையோட பார்க்கறாங்க. வீட்ல இருக்கற பொண்டாட்டிக்கு ஒரு முழம்



பூ வாங்க மனசில்லாதவன் இந்த பிரம்மாண்டமான ஹீரோ கட்-அவுட்டுக்கு எப்படி இவ்வளவு பெரிய மாலையைப் போட்டு அதைப் பார்த்து சந்தோஷப் படறான்?'

நினைக்க நினைக்க எரிச்சலாயிருந்தது வைஷ்ணவிக்கு.

'பீங்க்.. பீங்க..'

காரின் ஹார்ன் சத்தம் கேட்டு கலைந்தாள் வைஷ்ணவி.

ராஜேந்திரன் காரினின்றும் தலையை நீட்டி புன்னகைத்தான். கேட்டான். "என்ன வைஷ்ணவி கிருஷ்ணவேணி தியேட்டரையே விலைக்கு வாங்கப் போறியா.. அவ்வளவு டீப்பாப் பார்க்கறே..?"

"காசைக் கொடுத்து நிழலை ஆர்ப்ரிக்கற இந்த ஜனங்களை வேடிக்கை பார்த்துட்டிருந்தேன். அங்கே கொஞ்சம் திரும்பி லேடிஸ் கவுண்டர்ல பாருங்க. மாமியார் மருமக சண்டை மாதிரி ஒவ்வொருத்தியும் தலை மயிரைப் பிடிச்சிட்டு.."

"நீ மொதல்ல ஏறி கார்ல உட்கார் வைஷ்ணவி. உன்னை நிறையப் பேர் வேடிக்கை பார்க்கறாங்க.."

வைஷ்ணவி காருக்குள் போனாள்.

தி.நகரின் நெரிசலில் காரை நகர்த்தினான் ராஜேந்திரன்.

வைஷ்ணவி கேட்டாள். "ஆமா.. ஏன்

இன்னிக்கு பத்து நிமிஷம் லேட்.. என்ன விஷயம்..?"

"ஒரு முக்கியமான காரியத்தைப் பண்ணிட்டு வந்தேன்.."

"என்ன..?"

"நேத்தைக்கு மகாபலிபுரத்துல நடந்த சம்பவத்தை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை எழுதி ஹிண்டு லெட்டர்ஸ் டூ த எடிட்டர்ஸ்க்கும், மத்த பத்திரிகைகளுக்கும் என் கைப்பட நானே எழுதி போஸ்ட் பண்ணிட்டு வர்றேன்.."

"அந்த விவகாரத்தை நீங்க விடமாட்டீங்க போலிருக்கே.."

"எதுக்காக விடணும்..?"

"அவனோட பேரையெல்லாம் மென்ஷன் பண்ணி போட்டீங்களா..?"

"பேரையெல்லாம் மென்ஷன் பண்ணலை. ஒரு ரோக்னு அவனைச் சொல்லியிருக்கேன்.."

கார் பனகல் பார்க் ராம்ஸ் பஜார் வழியாகத் திரும்பியது.

"என்ன இன்னிக்கு இந்தப் பக்கமா திரும்பறீங்க ராஜா. கோடம்பாக்கத்துக்கு வழி மறந்து போச்சா..?"

"தெரியும் வைஷ்ணவி. இன்னிக்கு வாணி மஹால்ல ஒரு ப்ளூட் ஃபெர்பார்மென்ஸ். எனக்குத்தான் ப்ளூட்



மியூசிக் பிடிக்குமே. நீ எனக்கு கம்பெனி கொடுப்பாய் என்ற நம்பிக்கையில் ரெண்டு டிக்கெட் வாங்கிட்டேன்.."

இடது கை விரல்களால் போலிக் கவலையோடு நெற்றியைப் பிடித்துக் கொண்டாள் வைஷ்ணவி. "என்னைக் கேட்காமல் நீங்க எப்படி டிக்கெட் வாங்கலாம்..?"

"தப்புதான். தெரியாம வாங்கிட்டேன். என்னோட எதிர்காலப் பெண்டாட்டி மறுக்கவா போறாங்கற நம்பிக்கையில வாங்கிட்டேன்."

"எப்படித்தான் மூணு மணி நேரமும் ஒரே இடத்துல உட்கார்ந்துட்டு ஒரே மாதிரி ஊதற சத்தத்தைக் கேட்கப் போறது.."

"ப்ளீஸ்.. எனக்காக.. உன்னோட ராஜாவுக்காக..."

"ஓ.கே. நான் வர்றேன். வாணி மஹாலுக்குப் போறதுக்கு முன்னாடி ஒரு முன்னேற்பாட்டைப் பண்ணணும்.."

"என்ன..?"

"ஒரு ஸாரிடான் மாத்திரி முழுங்கி சாந்தாபவன்ல ஒரு காபி குடிக்கணும். கைவசம் ரெண்டு மாத்திரை வெச்சிக்கணும்.."

ராஜேந்திரன் சிரித்துக் கொண்டே காரை பாண்டி பஜாரில் நுழைந்து சாந்தாபவனுக்கு எதிரே நிறுத்தினான்.

"ராஜா."

"ம்.."

"நாம இப்படி ஜோடியா ஹோட்டலுக்குப் போறதையும் மியூசிக்குக்குப் போறதையும் நினைச்சா ஒரு விதத்துல சந்தோஷமா இருக்கு. இன்னொரு விதத்துல பயமா இருக்கு.."

"பயமா.. எதுக்கு பயம்..?"

"உங்கப்பா நம்ம கல்யாணத்துக்கு சம்மதிப்பாரான்னுதான்.."

"100% உத்தரவாதம். என்னோட அப்பா சம்மதிப்பார். என்னைத் தனியாக் கூட்டிட்டுப் போயி எப்படிடா எனக்கு இவ்வளவு அழகான மருமகளைக் கொண்டாந்தே..ன்னு கேட்பார்.."

வைஷ்ணவி சிரித்துக் கொண்டே சாந்தாபுவனின் மாடிப்படி ஏறினாள். இதயத்துக்குள் சந்தோஷம் முட்டி மோதியது.

ஏ.சி. அறைக்குள் போய் எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டார்கள். டேபிளின் மேல் வைத்திருந்த வைஷ்ணவியின் நெயில் பாலீஷ் பளபளத்த வெள்ளரிப் பிஞ்சு விரல்களை மெதுவாய் தடவி விட்டான் ராஜா.

வைஷ்ணவி முறைத்தாள்.

"ஆரம்பிச்சிட்டீங்களா.. உங்க குறும்பு விளையாட்டை..? ரூம் கொஞ்சம் டிம்லைட்டா அரையிருட்டா இருந்தாப் போதும். உங்க ஆம்பிளைத்தனத்தை காட்ட ஆரம்பிச்சிடுவீங்களே..."

"உன்னை வெறுமனே பார்த்துகிட்டு சும்மா உட்கார்ந்திட்டிருக்க முடியலையே வைஷ்ணவி. தேன்ல ஊறப்போட்ட செர்ரிப் பழம் மாதிரி எப்பப் பார்த்தாலும் தளதளன்னு இருக்கியே.."

வைஷ்ணவி புன்னகைத்தாள்.

"மாத நாவல் நிறையப் படிப்பீங்களோ..?"

"எப்படி கண்டுபிடிச்சே..?"

"அதான் செர்ரிப்பழ உவமானமெல்லாம் பிச்சிட்டு வருதே.. மொதல்ல காபிக்கு ஆர்டர் பண்ணுங்க.. ப்ளூட் கச்சேரிக்குப் போறதுக்கு முன்னாடியே எனக்கு தலைவலி ஆரம்பமாயிரும்.."

ராஜேந்திரன் வெயிட்டரைக் கூப்பிட்டு காப்பிக்குச் சொல்லிவிட்டு வைஷ்ணவியின் கண்களை ஏறிட்டான். ஆள்காட்டி விரலால் டேபிளில் தாளமிட்டுக் கொண்டே சொன்னான்.

"டெல்லிக்குப் போயிருக்கற அப்பா இன்னும் ரெண்டு நாள்ல வந்திருவார் வைஷ்ணவி. அப்பா வந்ததுமே நம்ம கல்யாணத்தைப் பத்திப் பேசப் போறேன்.."

"ரொம்ப சந்தோஷம்.." என்று விளையாட்டாய்க் கைகளைக் குவித்து பாமரத்தனமாய்க் கும்பிடு போட்டாள் வைஷ்ணவி.

"அப்பா உன்னைப் பார்க்கணும்பார். நான் நேரா காரை எடுத்துக்கிட்டு உன்னோட ஆபீசுக்கு வந்து ரிசப்ஷன் கவுண்டர்ல இருக்கற உன்னை அள்ளிக் கொண்டுபோய் எங்கப்பா முன்னாடி நிறுத்துவேன்.."

ராஜேந்திரன் உற்சாகமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வெயிட்டர் காபியோடு வந்தான்.

மாத்திரையை விழுங்கி காப்பியைக் குடித்து விட்டு வெளியே வந்தார்கள், காருக்குள் போனார்கள்.

வாணிமஹாலை நோக்கி பாண்டிபஜாரின் நெரிசலில் ஊர்ந்தது கார்.

"கச்சேரி முடிய எவ்வளவு நேரமாகும்..?"

"பதினொரு மணியாயிரும்.."

"அம்மாடியோவ்.. அவ்வளவு நேரமா?" என்று ஆச்சர்யப்பட்டுப் போனவள் கொஞ்சலாய்க் கூப்பிட்டாள்.

"ராஜா"

"ம்.."

"மியூசிக் போரடிச்சா நான் கிளம்பிடுவேன்.."

"வந்து பாரு.. கச்சேரி எப்படி இருக்குதுன்னு.. கடைசி நிமிஷம் வரைக்கும் நீயே உட்கார்ந்திருக்கப் போறே.."

கார் வாணி மஹாலுக்குள் நுழைந்தது.



# 3

ஒன்பதரை மணிக்கெல்லாம் நெளிய ஆரம்பித்து விட்டாள் வைஷ்ணவி. பட்டு ஜிப்பா போட்டு ஜவ்வாது வாசனையோடு இருந்த ப்ளூட்டிஸ்ட் கண்களை மூடி ப்ளூட் வாசிக்க ரஜேந்திரன் அதில் சுவாரஸ்யமாய் ஆழ்ந்திருக்க.. வைஷ்ணவி தன் இடது கை புறங்கையை உபயோகப்படுத்தி பீறிட்டு வந்த கொட்டாவியை நாசூக்காய் அடக்கினாள்.

கண்ணின் ஓரங்கள் சிவப்பேறி தூக்கக் கலக்கத்தில் இருந்தன.

"ராஜா.."

தன் ஆள்காட்டி விரலால் அவன் விலாவைக் குடைந்தாள். ராஜேந்திரன் திரும்பினான்.

"என்ன வைஷ்ணவி.?"

"எனக்குத் தூக்கம் கண்ணைச் சுழட்டுது.."

"கொஞ்சம் பொறுத்துக்கோ.. இப்போ கச்சேரி முடிஞ்சிரும்.."

"ஊ..ஹூம். ப்ளூட்டிஸ்ட் இருக்கற உற்சாகத்தைப் பார்த்தால் கச்சேரி முடிய மணி பன்னிரெண்டாயிரும் போலிருக்கு.. நான் கிளம்பறேன் ராஜா..."

"எப்படிப் போவே..?"

"ஆட்டோ பிடிச்சு..."

"நோ.. நோ.. உன்னை மாதிரியான பெண்களுக்கு ராத்திரி நேர ஆட்டோ சரியில்லை..."

"அப்போ பஸ்ல போயிடுறேன்."

"வேண்டாம். வா கார்லயே போயிடலாம்.." சீட்டை விட்டு எழ முற்பட்டான் ராஜேந்திரன். வைஷ்ணவி அவனுடைய கையைப் பற்றி உட்கார வைத்தாள்.

"நோ ராஜா. உங்களுக்குத்தான் ப்ளுட் கச்சேரி பிடிக்குமே. கடைசி வரைக்கும் இருந்து கேட்டுட்டு வாங்க.."

ராஜேந்திரன் புன்னகைத்தான்.

"நீ பத்திரமா வீடு போய்ச் சேர வேண்டியதுதான் எனக்கு முக்கியம். இந்தக் கச்சேரியை இதே மாசத்துல ஏதாவது ஒருநாள் போடுவாங்க. அப்பப் பார்த்துக் கலாம். ம்.. நட உன்னை உன்னோட வீட்ல கொண்டு போய் விட்டுட்டு நானும் படுக்கை யிலே விழறேன்.."

சீட்டை விட்டு எழுந்து இருவரும் வெளியே வந்தார்கள்.

வாணிமஹாலின் முகப்பு கேட் பூராவும் வர்ண விளக்குகள் மின்னி மின்னி அடங்க காற்று ஜிலுஜிலுவென்று அடித்தது.

"நீ இத்தனை நேரம் உட்கார்ந்திருந்ததே பெரிய விஷயம்.."

"உங்களுக்காகத்தான் பல்லைக் கடிச் சிட்டு உட்கார்ந்திட்டிருந்தேன். ஒன்பதரை



மணிக்கும் மேல என்னால உட்கார முடியலை. சாரி ராஜா."

"ஸோ வாட்.." கார் பார்க்கிங்கில் இருந்த தன்னுடைய காரைப் பொறுக்கிக்கொண்டு வந்தான் ராஜேந்திரன்.

வைஷ்ணவி காருக்குள் வந்ததும் கிளப்பினான்.

பாண்டிபஜார் போக்குவரத்து கசங்கல் இல்லாமல் சுலபமாய்த் தெரிய விர்ரென்று ஹோண்டாவைத் தேய்த்தான். உஸ்மான் ரோட்டில் திரும்பி நூல் பிடித்த மாதிரி நேராக கோடம்பாக்கம் மேம்பாலத்தில் ஏறினான்.

"பசிச்சா சாப்பிட்டுட்டுப் போகலாமே வைஷ்ணவி.."

"நோ..நோ.. வீட்ல பிரெட் இருக்கு.. இன்னிக்கு அதைச் சாப்பிடலைன்னா காய்ஞ்சு போயிரும்.."

கார் கோடம்பாக்கம் ஹைரோட்டில் திரும்பி ராம் தியேட்டர்க்கு எதிரே நுழைந்து பத்து நிமிடம் ஊர்ந்து வைஷ்ணவியின் வீட்டை நெருங்கியது.

"என்னெ என்னெ தேடி வந்த அஞ்சல..."

வைஷ்ணவியின் எதிர் வீட்டில் வாழை மரங்களும் பந்தலும் தெரிய அதன் உச்சியில் ஸ்பீக்கர் பாடியது.

"நீ இன்னிக்கு ராத்திரி தூங்கின மாதிரிதான் போ.." ராஜேந்திரன் சொல்லிக் கொண்டே காரை விட்டிறங்கின வைஷ்ண

விக்கு கையசைத்தான்.

அவள் சொன்னாள்.

"எதிர்வீட்டு விமலாவுக்கு கல்யாணம். நாளைக்குக் காலையில சீக்கிரமா எழுந்து கல்யாணத்துக்கு வேற போகணும்.."

"நான் வரட்டுமா வைஷ்ணவி.."

"ஓ.கே. ராஜா குட்நைட்."

"குட் நைட்.."

காரை பின்னுக்கு எடுத்து பிறகு விருட்டென்று சீறி கோடம்பாக்கம் ஹைரோட்டுக்குப் போனான் ராஜேந்திரன்.

காரின் சிவப்பு விளக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவி பின் டம்பப் பையிலிருந்த சாவியை எடுத்தக் கொண்டு வீட்டு வாசற்படி ஏறினாள்.

பூட்டின் வாயைப் பிளந்து உள்ளே போனாள்.

சுவரில் இருந்த சுவிட்ச் போர்டைத் தடவி வரிசையாய் சுவிட்களை தட்ட பட்.. பட்.. பட்..

எந்த விளக்கும் கண்ணைச் சிமிட்ட வில்லை.

அதே பழைய இருட்டு. ஆச்சர்யப்பட்டாள் வைஷ்ணவி. 'கரண்ட் பெய்லியர் என்றால் எதிர்வீட்டு ஒலிபெருக்கி பாடாதே?'

'என்னவாயிற்று..?'



'மெயினில் ஏதாவது ப்யுஸ் போய் விட்டதோ?'

இருட்டில் சுவரோரமாய் நடந்து அறையின் மூலைச்சுவரில் ஆணியில் மாட்டியிருக்கும் டார்ச்சை எடுக்கப் போனாள் வைஷ்ணவி.

இருட்டுப் பயம் கண்ணில் மை மாதிரி ஈஷியிருந்தது.

காலைக் கொஞ்சம் நகர்த்தி வைத்து நடந்தாள்.

எட்டாவது அடியை வைக்கும்போது காலில் எதுவோ இடறியது.

என்ன அது?

அப்படியே இருட்டில் உட்கார்ந்து வலது கையை நீட்டி தடவினாள்.

மெதுமெதுவென்று...

பிசுபிசுப்பாய்...

அது தட்டுப்பட்டது.

'என்னவாயிருக்கும்?' யோசித்துக் கொண்டே அதை இரண்டு கைகளாலும் தடவியவள் திடீரென்று அதிர்ந்து போனாள்.

துண்டிக்கப்பட்ட மனிதக்கை.

நீளநீளமான விரல்களோடு விறைப் பேறியிருந்த கை அது.

வாய்விட்டு அலறப்போன வைஷ்ணவி அந்த அலறலை அப்படியே விழுங்கி

ஜலஜலவென்று வியர்த்து மூலைச்சுவரில் இருந்த டார்ச்சை எடுக்க ஓடினாள்.

டார்ச் கைக்குக் கிடைத்ததும் பட்டனைத் தட்டி குப்பென்னு வெளிச்சத்தைக் கொட்டினாள். வீடு பூராவும் வெளிச்சம் வந்து தத்தித்தத்தி ஒடியது.

கடைசியில் அந்தக் கையின் மேல் வந்து நின்றது.

வைஷ்ணவி நடுங்கிக் கொண்டே அந்தக் கையின் அருகில் நெருங்கினாள். கையின் அமைப்பைப் பார்த்ததும் தெரிந்தது அது ஒரு ஆணின் கையென்று. முடி அடர்ந்து கறுப்பாய் மணிக்கட்டு தடிமனாய் விரல்கள் உருண்டையாய்..

கையை தோள்பட்டையோடு சேர்த்து நேராய் வெட்டியிருந்தார்கள். வெட்டின பாகத்தில் ரத்தம் உறைந்து போய் பிரிப் பிரியாய் தெரிந்தது.

வைஷ்ணவியின் இருதயம் உச்சபட்ச வேகத்தில் துடிக்க ஆரம்பித்தது. டார்ச்லைட் வெளிச்சத்தில் கையினின்றும் நகர்த்தி வீட்டின் பிற இருட்டான பகுதிகளை நோக்கி வீசினாள். வெளிச்சத்தில் வீட்டுச் சமான்கள் புலப்பட்டு புலப்பட்டு மறைந்தன.

கால்களை பெயர்த்து தன்னுடைய படுக்கையறைக்குள் மெதுவாக நுழைந்தாள் வைஷ்ணவி.

அதே விநாடி குபீரென்று அதிர்ந்தாள்.



கட்டிலில் யாரோ மல்லாந்திருந்தார்கள்.

நெடிய உடல்.

'யாரது..?' என்று கேட்க நினைத்து முடியாமல் பார்த்ததை தொண்டைக் குள்ளேயே நின்று கொள்ள வைஷ்ணவி யின் டார்ச் பிடித்திருந்த கை உதறிக் கொண்டே -

கட்டிலின் மேல் வெளிச்சத்தை வீசியது.

அந்த உடலின் மேல் வெளிச்சம்பட்ட விநாடியே 'ஆ...'வென்று வீறிட்டாள் வைஷ்ணவி.

கட்டிலில் -

வலது கை வெட்டப்பட்டிருக்க -

மார்பில் செருகியிருந்த அரிவாளோடு -

ராஜாக்கிளியின் உடல் மல்லாந்திருந்தது.

## 4

**வை**ஷ்ணவியின் விழிகள் நிலை குத்திப் போய் ராஜாக்கிளியின் உடம்புமேல் அழுத்தமாய்ப் பதிந்திருக்க அவளுடைய உடம்பு தன்னிச்சையாய் நடுங்கிக் கொண்டிருந்தது.

வெள்ளை விழிகள் மட்டும் வெளியே தெரிய ராஜாக்கிளி கோரமாய் செத்திருந் தான். வலது நாசித் துவாரத்தில் ரத்தம் வழிந்து மேலுதடு வரை நின்று பின் கருஞ்சிவப்பாய் உறைந்திருந்தது. மார்பில் செருகியிருந்த அரிவாள் முழுவதும்

நான்கைந்து முறை ரிங் போனதும் ரிசீவரை யாரோ எடுத்தார்கள்.

"ஹலோ.." ஒரு ரூபாய் நாணத்தைப் போட்டு லைனை உயிர்ப்பாக்கிக் கொண்டாள். கேட்டாள்.

"அங்கே ராஜேந்திரன் இருக்காரா?"

"இன்னும் வரலையேம்மா..."

"நீங்க யார் பேசறது..?"

"பங்களா சமையல்காரன் பேசறேன்மா.."

'ராஜேந்திரன் இன்னும் பங்களா போய் சேரவில்லை போலிருக்கிறது. ஒரு பத்து நிமிஷம் கழித்து மறுபடியும் போன் பண்ணிப் பார்க்க வேண்டியதுதான்.'

"சரி.. ஒரு பத்து நிமிஷம் கழிச்சு மறுபடியும் போன் பண்றேன்.." என்று சொன்னவளை அவன் இடைமறித்தான்.

"கொஞ்சம் இருங்கம்மா. போர்டிகோவில் கார் வந்து நிக்கற சத்தம் கேட்குது. சின்னய்யா இங்கே வந்துட்டாருன்னு நினைக்கறேன்."

மறுமுனையில் சிறிது இடைவெளிக்குப் பின் "ஹலோ.." ராஜே ந்திரனின் குரல் கேட்டது. ராஜேந்திரனின் குரலைக் கேட்டதுமே வைஷ்ணவிக்கு அழுகை வந்து குரல் தழுதழுத்தது.

"ரா..ராஜா.. நா.. வைஷ்ணவி பேசறேன்.."

"வாட் எ ப்ளசன்ட் சர்ப்ரைஸ். நாம



ரெண்டு பெரும் பிரிஞ்சு பத்து நிமிஷம்கூட ஆகலை. அதுக்குள்ளே ஃபோனா? உனக்கு இன்னிக்கு மூட் வந்திடுச்சா..."

"ராஜா பி சீரியஸ்.."

குரல் பட்டென்று உடைய விசும்பினாள்.

"வை..வைஷ்ணவி.. நீ அழறியா..? என்னாச்சு..?"

"ராஜா உடனே என் வீட்டுக்கு வாங்க.."

"என்ன விஷயம் வைஷ்ணவி..?"

"போன்ல சொல்ற விஷயமில்லை... உடனே புறப்பட்டு வாங்க.."

"எனிதிங்க் ராங்..?"

"நேர்ல வாங்க புரியும். என் வீட்டுக்கு வர்றப்போ முன் பக்கமா வராதீங்க. வீட்டோட பின்புறக் கதவைத் திறந்து வெச்சிருக்கேன். பவர்ஹவுஸ் ரோடு வழியா வந்திருங்க. கார் வேணாம். ஆட்டோ பிடிச்சு வந்திருங்க.."

"இப்ப.. இப்பவே வந்துடறேன் வைஷ்ணவி. நீ இப்போ எந்த டெலிபோன் பூத்லேருந்து பேசறே..?"

"ராயல் ஹோட்டல் பூத்லேருந்து.. போனை வெச்சிடறேன்.. சீக்கிரமா வாங்க.."

ரிசீவரை வைத்துவிட்டு வெளியே வந்தாள் வைஷ்ணவி. மறுபடியும் வியர்க்க ஆரம்பிக்க சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே வேகமாய் நடந்து தன் வீடு இருந்த அடுத்த ரோட்டுக்கு வந்தாள்.

பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் நான்கைந்து பேர் இன்னமும் சீட்டாடிக் கொண்டிருந்தனர். ஒலி பெருக்கியின் இரைச்சல் நின்றிருந்தது. சீட்டாட்டக் கும்பலில் புதிதாய்ச் சேர்ந்து ஆடுவதற்காக காத்திருந்த விமாலாவின் அப்பா வைஷ்ணவியைப் பார்த்ததும் எழுந்து வந்தார்.

"ஏம்மா.. இந்த இருட்டுல தனியா எங்கே போயிட்டு வர்றே..?" திடீரென்று கேட்ட அந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று சில விநாடிகள் திணறி பிறகு சொன்னாள்.

"மெழுகு..மெழுகுவர்த்தி வாங்கப் போனேன்.."

"மெழுகுவர்த்தியா...? ஏன் கரண்ட் என்னாச்சு..?"

"ஸ்விட்ச் போட்டா எரியலை. மெய்ன்ல ப்யூஸ் போயிடுச்சுபோல..."

"என்ன பொண்ணும்மா நீ.. போன ப்யூஸைப் போடறதுக்கு எவ்வளவு நேரமாகும். அஞ்சு நிமிஷ வேலை. இங்கே இருக்கற யாரையாச்சும் ஒருத்தரைக் கூப்பிட்டு விட்டிருந்தா ப்யூஸைப் போட்டிருப்பாங்களே.. அதுக்காக இந்த இருட்டுல மெயின் ரோட்ல இருக்கற கடைக்குத் தனியாப் போனியா..? டேய் தங்கராசு.."

"என்ன மாமா..?"



சீட்டாடுவதை வேடிக்கை பாாத்துக் கொண்டிருந்த அந்த உயரமான இளைஞன் ஓடி வந்தான். விமலாவின் அப்பா கேட்டார்.

"உனக்கு ப்யூஸ் போடத் தெரியுமாடா...?"

"தெரியும் மாமா.."

"போ.. போய் வைஷ்ணவி வீட்ல ப்யூஸ் போட்டுக் கொடுத்துட்டு வா... போ.." அந்த இளைஞன் வீட்டை நோக்கி வர அதிர்ந்தாள் வைஷ்ணவி.

'வேண்டாம்' என்கிற மாதிரி கையை நீட்டித் தடுத்தாள்.

"ஏம்மா வேண்டாங்கறே..?"

"அந்த மெயின் ஸ்விட்ச் போர்ட்ல ஒரு மாசமாவே சரியில்லை. கையை எங்கே வெச்சாலும் விர்விர்ருங்குது.. இந்த ராத்திரி நேரத்துல ப்யூஸ் போடறது அவ்வளவு சரியா இல்ல. விடிஞ்சதும் நாளைக்குப் போட்டுக் கலாமே.."

விமலாவின் அப்பா தாடையைச் சொறிந்தார்.

"நீ சொல்றதும் சரிதாம்மா. இந்தப் பயலுக்கு அவ்வளவா விபரம் தெரியாது. எசகுபிசகா கையை எங்கியாவது வெச்சிட்டான்னா நாளைக்கு எம்மக கழுத்துல தாலி ஏறாது. நாளைக்கே பார்த்துக்கலாம். நீ போம்மா.."

வைஷ்ணவி நிம்மதியான பெருமூச் சொன்றை விட்டபடி வீட்டு வாசற்படி

ஏறினாள். விமலாவின் அப்பா குரல் கொடுத்தார்.

"நாளைக்குக் காலையில சரியா முகூர்த்த நேரத்துக்கு முன்னாடியே வந்துரு வைஷ்ணவி. கொஞ்சம் கல்யாண காரியங்களுக்கு ஒத்தாசையா இரு.."

வலுக்கட்டாயமாய்ப் புன்னகைத்து தலையாட்டினாள் வைஷ்ணவி. "கண்டிப்பாய் வந்துட்றேன்." பூட்டைத்திறந்து கொண்டு உள்ளே போனதும் காத்திருந்த இருட்டு அவளை உள்வாங்கிக் கொண்டது. கதவை உள்பக்கமாய்த் தாளிட்டாள்.

முன் அறைத் திட்டில் வைத்துவிட்டுப் போன டார்ச்சை லேசாய்த் துழாவி எடுத்துக் கொண்டாள். வெளிச்சத்தைப் பிறப்பித்து மெதுவாய் நடந்தாள்.

அறையின் நடுவே ராஜாக்கிளியின் துண்டிக்கப்பட்ட கை டார்ச் வெளிச்சத்தில் பட்டுத் தெரிய நெஞ்சு மறுபடியும் புதிதாய் அதிர்ந்து வேகமாய்த் துடிக்க ஆரம்பித்தது. ஒரு கையில் டார்ச்சையும் இனனொரு கையில் மார்பையும் பற்றிக் கொண்டு சுவரோரமாய் நடந்து தன் படுக்கையறைக்கு வந்து உள்ளே எட்டிப் பார்த்தாள்.

ராஜாக்கிளியின் ஒற்றைக்கை உடம்பு இன்னமும் அப்படியே கிடந்தது. திரும்பினாள். மனசுக்குள் ஒரு பயங்கரமான கற்பனை எழுந்தது.

அவள் திரும்பி நடக்கும்போது, "ஏய்..



இங்கே வா.." என்று கூப்பிட்டுக் கொண்டே ராஜாக்கிளி தன் ஒற்றைக் கையோடு எழுந்து வந்தால் எப்படியிருக்கும்?

நினைப்பிலேயே சொதசொதவென்று நனைந்து போனாள் வைஷ்ணவி.

படுக்கையறைக் கதவைச் சாத்திக் கொண்டு வீட்டின் பின்கட்டுக்கு வந்தாள்.

கிணற்று மேடையும் அதற்குப் பக்கத்தில் வளர்ந்திருந்த குட்டையான தென்னை மரமும் நட்சத்திர வெளிச்சத்தில் சோகையாய்த் தெரிந்தது. காற்று உற்சாகமாய் இருந்தது.

டார்ச்சின் வெளிச்சப்பட்டையோடு கிணற்றைத் தாண்டி பின்பக்கக் கதவுக்கு வந்து அதன் பூட்டை சாவியால் பிளந்து திறந்தாள்.

கதவு கிறிச்சென்று விலகியது.

வீட்டின் பின்பக்கத் தெரு ஒரு சாமியாரின் மோனத்தில் இருந்தது.

கதவை திறந்து வைத்த வைஷ்ணவி ராஜேந்திரனுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள். இதயம் அடங்காத ரேஸ் குதிரை மாதிரி தறிகெட்டு ஓட ஆரம்பித்தது.

## 5

**ரா**ஜேந்திரன் வந்து சேர்ந்தபோது மணி 10.50. அவனும் வியர்த்துப் போயிருந்தான்.

காத்திருந்த வைஷ்ணவியின் தோளைத்

தொட்டான். "என்ன வைஷ்ணவி? உனக்கு என்னாச்சு...?"

"உள்ளே வாங்க சொல்றேன்.."

"வைஷ்ணவி.." அவளுடைய முதுகில் கை வைத்தான்.

"ராஜா..."

"என்ன வைஷ்ணவி உனக்கு என்னாச்சு..?"

"ரா...ராஜா.."

"சொல்லு.."

"அந்த ரவுடி.. அந்த ரௌடி.. உள்...உள்ளே செத்துக் கிடக்கான்.."

குபீரென்று நிமிர்ந்தான் ராஜேந்திரன். நாக்கில் ஈரம் காணாமல் போயிருக்க பேச்சுக்காகத் திணறினான்.

"எ..எ..எந்த ரௌடி வைஷ்ணவி..? அந்த மகாபலிபுரம் ரவுடியா..?"

"ஆ..ஆமா.."

"எ..எ...எப்படி..?"

"தெ..தெரியலை ராஜா.."

"எங்கே செத்துக் கிடக்கான்? வா.. உள்ளே போய்ப் பார்க்கலாம்.."

மெதுவாய் உள்ளே போனார்கள்.

"கரன்ட் பெய்லியரா வைஷ்ணவி..?"

"ஆமா.."



"அந்த டார்ச்சை என்கிட்டக் கொடு.. எந்த ரூம்ல பாடி இருக்கு..?"

"என்னோட பெட் ரூம்ல.."

உள்ளே நுழைந்தார்கள். டார்ச் வெளிச்சம் பெட்ரூமை நோக்கிப் போக வெளிச்சத்தைத் தொடர்ந்து உள்ளே போனார்கள். "ரா..ராஜா.. எனக்குப் பயமாயிருக்கு..." அழுகை தெறிக்க சொல்லிக் கொண்டே ராஜேந்திரனின் தோள் பட்டையை அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டாள் வைஷ்ணவி.

ராஜேந்திரன் வியர்த்துக் கொண்டே உள்ளே போனான்.

டார்ச் வெளிச்சம் கட்டிலில் பட ஹக் கென்று மார்பைப் பற்றிக் கொண்டு அதிர்ந்து பார்வை நிலைகுத்தினான். டார்ச் வெளிச்சம் இருட்டில் நடுங்கியது.

"இ..இது.. எப்படி..? வை.. வைஷ்ணவி..?"

"எ..எனக்குத் தெரியலை ராஜா. அடுத்த ரூம்ல பாடியோட கை ஒண்ணு தனியாக் கெடக்குது..." வைஷ்ணவியின் குரல் குழறியது.

கோரமாய் செத்துக் கிடந்த ராஜாக் கிளியையே பார்த்துக் கொண்டிருந்தான் ராஜேந்திரன். டார்ச் வெளிச்சத்தை கொஞ்சம் கொஞ்சமாய் நகர்த்தி கட்டிலைச் சுற்றிவந்து சலனமில்லாத உடம்பை தீவிரமாய் அலசினான். புறங்கையால் வியர்வையைத்

துடைத்துக் கொண்டு வைஷ்ணவியை ஏறிட்டான்.

"வைஷ்ணவி.."

"ம்.."

"ரவுடி ராஜாக்கிளியை யாரோ கொன்னு வேணும்னே உன்னோட வீட்ல கொண்டு வந்து போட்டிருக்காங்க.."

"எதுக்காக இங்கே கொண்டு வந்து போடணும்..?"

வைஷ்ணவி மெல்லிய குரலில் கேட்டாள்.

"அதான் எனக்குப் புரியலை.."

"இப்போ என்ன பண்றது ராஜா.."

"போலீசுக்கு விஷயத்தைக் கொண்டு போக முடியாது வைஷ்ணவி. ஏன்னா இந்த ராஜாக்கிளியோட நாம ரெண்டு பேரும் ஏற்கனவே மோதியிருக்கோம். உண்மையான குற்றவாளி கிடைக்கற வரைக்கும் போலீஸ் உன்னையும் என்னையும்தான் சந்தேகப் படுவாங்க."

"போலீசுக்குப் போகாம நாம என்ன பண்ண முடியும்...?"

"பாடியை யார்க்கும் தெரியாம டிஸ்போஸ் பண்ணிடலாம்.."

"எப்படி டிஸ்போஸ் பண்ணப் போறோம் ராஜா..?"



"வைஷ்ணவி. இந்த விஷயத்தை வெளியே யார்கிட்டேயும் சொல்லலையே.."

"இல்ல.."

"நீ இங்கேயே வெயிட் பண்ணிட்டிரு.. நான் என் வீட்டுக்குப் போய் என்னோட காரை எடுத்துட்டு வாரேன். பாடியை காரோட டிக்கியில் ஏத்திட்டுப் போய் ஏதாவது ஒரு இடத்துல புதைச்சிடலாம்."

"ராஜா. நீங்க இந்த விஷயத்துல இறங்கறது எனக்கு பயமாயிருக்கு.. பாடியை கார்ல ஏத்திட்டுப் போறப்பா யாராவது பார்த்துட்டா விபரீதமாயிரும்.."

"பயப்படாதே வைஷ்ணவி. நான் போய்க் காரைக் கொண்டு வர்றேன். பின்பக்க வாசல் கதவைத் திறந்து வை. நேரத்தைக் கடத்தறதுல ஒரு பிரயோஜனமும் இல்ல.."

ராஜேந்திரன் பேசிக்கொண்டே அறையை விட்டு வெளியே வர அதே விநாடி..

முன்புற வாசல் கதவை யாரோ தட்தட்டென்று தட்டினார்கள்.

ராஜேந்திரனும் வைஷ்ணவியும் பயந்துபோய் இருட்டில் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

கதவு தொடர்ந்து தட்டப்பட்டது.

## 6

**த**ட்டப்படும் கதவை நோக்கி நகர முயன்ற வைஷ்ணவியின் கையைப் பற்றி

நிறுத்தினான் ராஜேந்திரன்.

"வைஷ்ணவி. அவசரப்படாதே பொறு. கதவைத் தட்றது யாருன்னு தெரிஞ்சிக்காமே கதவைத் திறக்காதே.."

"கேட்டுத் திறக்கறேன் ராஜா.."

"ஜாக்கிரதை.." ராஜேந்திரன் பதட்டமாய்ச் சொல்ல டார்ச்சை வாங்கிக்கொண்டு கதவை நோக்கி நடந்தாள் வைஷ்ணவி. கண்களுக்குப் பழக்கமாகி விட்ட இருட்டில் சுவரோரமாய் நடந்த முன்வாசல் கதவை நெருங்கினாள்.

"தட்..தட்ட.."

கதவைத் தொடர்ந்து தட்டிக் கொண்டிருந்தார்கள்.

"யாரது..?"

குரலில் நடுக்கம் தெறிக்கக் கேட்டாள் வைஷ்ணவி.

"வைஷ்ணவி கதவைத் திறம்மா..." வெளியே விமலாவின் அப்பா.

நெஞ்சை நீவி ஆசுவாசப்படுத்திக் கொண்டு..

கதவின் தாழ்ப்பாளை விலக்கினாள் வைஷ்ணவி, ப்ளக். வாசற்படியில் நின்றிருந்த விமலாவின் அப்பா வாயில் இருந்த தாம்பூலச் சாற்றைத் தெருவோரச் சாக்கடையில் துப்பிக் கொண்டு கேட்டார்.

"என்னம்மா தூங்கிட்டிருந்தியா..?"



"ஆ..ஆமா.."

"உன்னால ஒரு உதவியாகணுமேம்மா.." சிரித்துக் கொண்டே கேட்டார்.

"சொல்...சொல்லுங்க.."

"ஏம்மா.. குரலும் மூஞ்சியும் ஒரு மாதிரியா இருக்கு.."

"ஒண்ணுமில்லை. நல்லாத் தூங்கிட்டு இருந்தேன். திடீர்னு தூக்கம் கலைஞ்சதாலே அப்படி.. நீங்க விஷயத்தைச் சொல்லுங்க..?"

"அது வந்தும்மா.. கல்யாணத்துக்காக கோயமுத்தூரிலிருந்து நம்ம உறவு ஜனம் ஒரு நாப்பது பேர் வர்றாங்க. இன்னும் அரை மணி நேரத்துல வந்திருவாங்க. முக்கால் வாசிப் பேர் தங்கறதுக்கு இடம் ஏற்பாடு பண்ணிட்டேன். லேடீஸ் பத்துப் பதினைந்து பேருக்கு இடம் வேணும். விமலாதான் சொன்னா. வைஷ்ணவி வீட்ல தங்க வெச்சிடலாம்னு. நீ என்னம்மா சொல்றே..?"

பதில் சொல்ல மிகவும் திணறினாள் வைஷ்ணவி.

அவளுடைய திணறலைப் பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டே போனார். "அசலூர் ஜனம் வந்துட்டா அவங்களுக்கு நாம தர்ற மரியாதையைத் தந்துதானே ஆகணும். உனக்கு இந்த அகால நேரத்துல தொந்தரவு தர்றேன். பொறுத்துக்கோம்மா.."

"அவங்க எப்ப வர்றாங்க..?"

"கோயமுத்தூர்ல மத்தியானம் ஒரு மணிக்கு பஸ் ஏறிட்டாங்களாம். எப்படியும் பதினொரு மணிக்குள்ளே வந்துடணும். எந்த நிமிஷமும் அவங்க வரலாம். அவங்க வந்ததுமே கதவைத் தட்றேன். அவங்க தங்கறதுக்கு இந்த ஒரு ராத்திரி வசதி பண்ணிக் கொடும்மா..."

"வீட்ல கரன்ட் வேற இல்லையே...?" குரலை இழுத்த மாதிரி சொல்லிப் பார்த்தாள். அவர் உச் கொட்டிச் சிரித்தார்.

"கரன்ட் இல்லாட்டி என்னம்மா. ஒரு பெட்ரோமாக்ஸ் லைட்டை அனுப்பறேன். வீடு பூராவும் ஜெகஜ்ஜோதியா இருக்கும் பாரேன். போய் படும்மா. உறவு ஜனம் வந்ததும் எழுப்பறேன்."

அவர் மறுபடியும் தாம்பூலச்சாறைத் துப்பி விட்டு நகர்ந்தார். கதவைத் தாழிட்டுவிட்டு உள்ளே வந்தாள் வைஷ்ணவி.

இருட்டோடு இருட்டாய் நின்றிருந்த ராஜேந்திரன் வைஷ்ணவியை நோக்கி வேகமாய் வந்தான்.

"என்ன வைஷ்ணவி யாரோட இவ்வளவு நேரம் பேசிட்டிருந்தே?" ராஜேந்திரன் கேட்கக் கேட்க வைஷ்ணவி நெற்றியில் கை வைத்து அப்படியே தளர்ந்து போய் உட்கார்ந்தாள்.

"வைஷ்ணவி என்னாச்சு..?"

"ராஜா புதுசா ஒரு சிக்கல்.."



"என்ன..?"

விமலாவின் அப்பா வந்து போனதையும் அவர் கேட்டதையும் சொன்னாள் வைஷ்ணவி.

ராஜேந்திரன் உறைந்தான்.

"அவர் சொன்னதுக்காக நீ எதுக்கு ஒத்துக்கிட்டே வைஷ்ணவி. ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அனுப்பியிருக்கலாமே.."

"இது கல்யாண காரியம் ராஜா. நான் தட்டிக் கழிக்க முடியாது. எதிர் வீட்ல இருந்துகிட்டு அப்படியெல்லாம் சொல்ல முடியாது. நாளைக்கு ஒருத்தரையொருத்தர் முகத்தைப் பார்த்துக்க வேணாமா?"

"ஓ..கே.. ஓ.கே.. அவரோட உறவு ஜனங்க எப்ப வர்றாங்களாம்..?"

"எந்த நிமிஷமும் வரலாம்னு சொன்னார்."

தன் கையில் மின்னிய ரேடியம் வாட்சைப் பார்த்தான் ராஜேந்திரன்.

அது பச்சையாய் ஒளிர்ந்து 11.05 என்றது.

"நான் காரைக் கொண்டு வர்றதுக்கு அவகாசம் இல்லை வைஷ்ணவி. அந்த நேரத்துல உறவு ஜனம் வந்துட்டா சிக்கலாயிரும்.."

வைஷ்ணவி தலையைப் பிடித்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தாள். சில விநாடி யோசனைக்குப் பிறகு ராஜேந்திரன்

அவளுடைய தோளைத் தொட்டான்.

"வைஷ்ணவி.."

"ம்.."

"வீட்ல மண்வெட்டியோ கடப்பாறையோ இருக்கா..?"

"மண்வெட்டியில்ல ராஜா. சின்னதா ஒரு கடப்பாறை இருக்கு.."

"அதை எடுத்துட்டு வா. வீட்டுக்குப் பின்னாடியே கிணத்து மேடைக்குப் பக்கமா ஆழமா ஒரு குழியைத் தோண்டி பாடியை புதைச்சிடலாம்."

"என்னது.. வீட்டுக்குப் பின்னாடியா...?"

கண்களில் அகலமாய் பயந்தாள் வைஷ்ணவி.

"வேற வழியில்லை நாம இப்போ இருக்கற நிலைமையில் பாடியை வெளியே கொண்டு போக முடியாது. வீட்டுக்கு பின்னாடியே புதைச்சிடறது தான் பெட்டர்."

வைஷ்ணவியின் உடல் நடுங்கியது.

"எனக்கு மயக்கம் வர்ற மாதிரி இருக்குது ராஜா.."

"இதோ பார் வைஷ்ணவி. இந்த நிமிஷத்துல இருந்துதான் உனக்கு தைரியம் வேணும்.. ம். எந்திரி. கடப்பாறையை எடுத்துட்டு வா. நான் பாடியை இழுத்துட்டு வர்றேன்.."



"ராஜா.."

"ம்.. யோசிக்காம எந்திரிச்சு வா.."

வைஷ்ணவி எழுந்தாள். ராஜேந்திரன் டார்ச் வெளிச்சத்தை வீசிக்கொண்டே கேட்டான். "துண்டான கை எங்கியோ கெடக்குன்னு சொன்னியே வைஷ்ணவி. எங்கே..?"

"நடு ரூம்ல.."

டார்ச் வெளிச்சத்தோடு போய் அதை ஒரு ஆயுதம் மாதிரி எடுத்துக் கொண்டு வந்தான் ராஜேந்திரன்.

வைஷ்ணவி கடப்பாறையை தேடி பக்கவாட்டு அறைக்குப் போனாள்.

நிமிஷங்கள் மவுனமாய் ஓடிக் கொண்டிருந்தன.

## 7

ஆறடி நீளம். இரண்டடி அகலம். நாலடி ஆழத்தில் கிணற்று மேடைக்கு கொஞ்சம் தள்ளி குழியொன்று பிறந்திருக்க உடம்பு பூராவும் மண் தீற்றலோடும் வியர்வை யோடும் நிமிர்ந்தான் ராஜேந்திரன்.

அவனுக்குப் பழக்கமில்லாத அந்த வேலையில் நிரம்பவும் களைத்துப் போயிருந்தான். குழிக்கு மேலே நின்றிருந்த வைஷ்ணவி கண்களில் நீர் வழிய அவனையே பார்த்தாள். ராஜேந்திரன் கையை ஊன்றி மேலே வந்தான். மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கினான். அப்படியே

உட்கார்ந்தான்.

"வைஷ்ணவி.."

"ராஜா.."

"கொஞ்சம் குடிக்கத் தண்ணி வேணும்.."

"இதோ.." வேகமாய் வீட்டின் உள்ளே போனாள். ராஜேந்திரன் வாழை மரத்துக்குக் கீழே அரையிருட்டில் தெரிந்த ராஜாக் கிளியின் ஒற்றைக் கையையும் உடம்பையும் பார்த்தான். எழுந்து வந்து சடலத்தின் காலைப் பற்றி இழுத்து குழிக்குள் போனள் மாதிரி கொடுத்தான்.

மண்டியிட்டு உட்கார்ந்து குழியைச் சுற்றிலும் கொட்டியிருந்த மணலைக் கைகளால் தள்ள ஆரம்பித்தான்.

வைஷ்ணவி உள்ளேயிருந்து தண்ணீர செம்போடு வந்தாள். செம்பை வாங்கிய ராஜேந்திரன் அதே " மூச்சில் தண்ணீ பூராவையும் வயிற்றுக்கு வார்த்துக் கொண்டு மறுபடியும் மண்டியிட்டு உட்கார்ந்து மணலைத் தள்ள ஆரம்பித்தான்.

உதவிக்கு வைஷ்ணவியும் சேர்ந்து கொண்டாள்.

பத்தே நிமிஷம் -

குழி சுத்தமாய் கண்ணை மூடிக் கொண்டது.

இருவரும் மண்ணை மூடிய குழியைக் காலால் மிதித்துச் சமன்படுத்தினார்கள்



ராஜேந்திரன் முகத்தில் வழிந்த வியர்வையைப் புறங்கையால் துடைத்த படியே கூப்பிட்டான்.

"வைஷ்ணவி."

"ம்.."

"இந்தக் கிணத்துலேருந்து தண்ணி எடுக்க வெளியிலிருந்து லேடீஸ் வருவாங்களா..?"

"எப்பவாவது வருவாங்க..."

"நாளைக்கு வந்தா விடாதே.."

"என்ன காரணத்தைச் சொல்றது..."

"கிணத்துல பூனையோ பெருச்சாளியோ செத்து மிதக்குதுன்னு சொல்லிடு.."

"சொல்லிடறேன்.." என்றவள் தயங்கி "ராஜா" என்றாள்.

"இனிமே இந்த வீட்ல என்னால இருக்க முடியாது. ராத்திரி நேரங்கள்ல பயந்து நடுங்கியே செத்துருவேன்.."

"திடீர்னு இந்த வீட்டைக் காலி பண்ணிட்டு நீ வேற விட்டுக்குப் போனால் ஆபத்து இருக்கு வைஷ்ணவி.."

"என்ன ஆபத்து..?"

"நீ இந்த வீட்டைக் காலி பண்ணின அடுத்த நாளே வேற யாராவது இந்த வீட்டுக்கு குடி வர மாட்டாங்கன்னு என்ன நிச்சயம்? அதுவும் இந்த ஏரியாவுல வீடு கிடைக்கறது கஷ்டம். வீட்டைக் காலி

பண்ணிட்டுப் போறதா வீட்டுக்காரர்கிட்டச் சொன்ன அடுத்த நிமிஷமே அவர் வேற ஒரு டெனன்ட்டைக் கொண்டு வந்திடுவார். இந்த வீட்டுக்குக் குடி வர்றவங்க பின்னாடி செடி நடறதுக்காக குழி தோண்ட ஆரம்பிச்சாங்கன்னா விஷயம் வெளியே வந்திரும். போலீஸ் விசாரிக்க ஆரம்பிச்சா நாம மாட்டிக்குவோம். பேசாம இதே வீட்ல இருந்துடு வைஷ்ணவி.."

வைஷ்ணவி ஒப்புக்குத் தலையசைத்தாளே தவிர -

மனசுக்குள் பயம் கிடந்து அடித்துக் கொண்டது. ராஜேந்திரன் அருகிலிருந்த தண்ணீர்த் தொட்டியில் தண்ணீர் மொண்டு முழங்கையிலும் காலிலும் அப்பியிருந்த மண் போக கழுவிக் கொண்டு புறப்பட ஆரம்பித்தான்.

"வைஷ்ணவி.. பயப்படாமே எப்பவும் மாதிரி இயல்பாக இரு. நான் புறப்படறேன். நாளைக்கு சாயந்திரம் தி.நகர் டெர்மினஸ்ல மீட் பண்ணலாம். நடுவில ஏதாவது ஹெல்ப் வேண்டியிருந்தா எனக்குப் போன் பண்ணு.."

"ம்."

"கதவைச் சாத்திக்க.."

ராஜேந்திரன் வெளியே வந்தான்.

குப்பைத்தொட்டி அருகே படுத்திருந்த சொறி நாயொன்று ராஜேந்திரனை பார்த்துக் குரைக்க ராஜேந்திரன் அதைப் பொருட்படுத்தாமல் மெயின் ரோட்டை நோக்கி விறுவிறு



வென்று நடக்க ஆரம்பித்தான்.

வைஷ்ணவி கதவைச் சாத்திக் கொண்டு.

பயத்தோடு உள்ளே வந்தாள்

அதே விநாடி தட் தட் கதவு தட்டப்பட்டது.

வைஷ்ணவி ராஜாக்கிளி மூடப்பட்டிருந்த குழியைப் பார்த்துக் கொண்டே கதவை நோக்கிப் போனாள்.

"யாரது...?"

"பெட்ரோமாக்ஸ் லைட் கொண்டு வந்திருக்கேன்மா.. எதிர்த்த வீட்டுப் பெரியவர் சொன்னாரு.."

ஒரு ஆண் குரல் கேட்க...

கதவைத் திறந்தாள் வைஷ்ணவி.

பெட்ரோமாக்ஸ் விளக்கு 'ஸ்..ஸ்..ஸ்..' என்ற இரைச்சலோடு எரிய தலையில் முண்டாசு கட்டின ஆள் ஒருத்தன் நின்றிருந்தான்.

"உள்ளே கொண்டு போய் வை.." சொல்லி விட்டு உள்ளே போனாள் வைஷ்ணவி.

## 8

மறுநாள் காலை ராஜேந்திரன் கண் விழித்த போது மணி எட்டு. கண்ணாடி ஜன்னல் வழியே கர்ட்டனையும் மீறி மெட்ராஸ் சூரியன் சுள்ளென்று உள்ளே

வந்தான்.

இண்டர்காமை எடுத்து சமையலறைக்( காப்பி சொன்னபோது சமையல்காரர் சிவ பவ்யமான குரலில் சொன்னான்.

"அய்யா.. பெரியவரு டெல்லியிலிருந் வந்துட்டாருங்க. நீங்க கண் விழிச்சதுே கீழே ஹாலுக்கு வரச் சொன்னார்.."

"சரி. காப்பியைக் கீழே கொண்டாந்துடு.. போர்வையை உதறிவிட்டு விருட்டென் கட்டினிலின்றும் எழுந்தான். கழுத் லிருந்த தங்கச் செயினும் அத லாக்கெட்டும் துள்ளியது.

'இரண்டு நாள் கழித்துதான் வருவா என்று எதிர்பார்க்கப்பட்ட அப்பா இன்றைக்ே வந்திருக்கிறாரா? ஆச்சர்யந்தான்.'

நைட்கவுன் முடிச்சை இறுக்கிக் கட்டி கெண்டு மாடிப்படிகளில் இறங்கியபோ நேற்றைய சம்பவங்கள் மனசுக்குள் எட்டி பார்க்க அடிவயிற்றில் ஒரு தீப்பிழம் உதித்தது.

'வைஷ்ணவி எப்படி ராத்திரிப் பொழுை ஓட்டினாள்?'

யோசித்துக் கொண்டே படியிறங்கி வனை ஹாலின் சோபாவில் உட்கார்ந்திருந் சந்திரசேகரன் ஹிண்டு பேப்பரை அவச அவசரமாய் மேய்ந்து கொண்டே சொன் குட்மார்னிங் ஈர்த்தது.

"குட்மார்னிங் டாட்.."



"ராத்திரி என்ன செகண்ட் ஷோவா..?"

"நோ டாட்.. ஒரு ப்ரண்ட்டோட மேரேஜ் பார்ட்டி.." பொய்யை சரளமாய்ச் சொல்லிக் கொண்டே அப்பாவுக்கு எதிரே நாற்காலியில் உட்கார்ந்தான்.

"தென் சன். நீ எப்படியிருக்கே..?"

"பைன் டாட்.."

"நான் டெல்லியிலிருந்து இவ்வளவு சீக்கிரமாய் மெட்ராஸ் வந்தது உனக்கு ஆச்சர்யமாய் இருக்கா?"

"ஆச்சர்யம்தான் டாட். கம்மோடீஸ் செர்மனைப் பார்த்தீங்களா.. நம்ம கான்ட்ராக்ட்ஸுக்கு ஒத்துக்கிட்டாரா?"

"நோ ராஜன்.. இந்தத் தடவை நான் டெல்லியில அதிகமா பிசினஸைப் பார்ககலை. எனக்கு வரப் போற மருமகளைப் பார்த்திட்டிருந்தேன்.."

"டாட்.."

சோபாவின் நுனிக்கு வழுக்கினான் ராஜேந்திரன்.

"எஸ் மை டியர் சன். எனக்குக் கல்யாணம் பண்ணி வைங்கப்பான்னு நீ வாயைத் திறக்கறதுக்கு முன்னாடியே நான் கல்யாணத்தைப் பண்ணி வெச்சிடறது உத்தமமான காரியம் இல்லையா?"

"டாட்.."

"பொண்ணையும் பார்த்துட்டேன் ராஜன்.

நம்மையும் மீறின இடம். ராம்தாஸ் க்ரூப்ஸ் பேமிலி. பெண்ணோட பேரு யாமினி. அந்த அளவுக்கு லட்சணமான பெண்ணை நம்ம சவுத்லயே பார்க்க முடியாது."

"டாட்..."

"உன்னேட முகம் சரியில்லை. நீ என்னமோ சொல்ல வர்றே... சொல்லு ராஜன்.?"

ராஜேந்திரன் தயங்கினான். பிறகு சொன்னான்.

"என்னோட கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்..?"

சந்திரசேகரன் சிரித்தார்.

"பெண்ணோட போட்டோவைப் பார்த்தா இப்படி சொல்ல மாட்டே.. நாளைக்கே கல்யாணம் பண்ணி வெக்க மாட்டீங்களான்னு கேப்பே.." சொல்லிக் கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து அந்தப் பழுப்பு நிறக் கவரை எடுத்து அதிலிருந்து ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை உருவி அவன் முன்னே நீட்டினார்.

"சாரி டாட். நான் போட்டோவைப் பார்க்க விரும்பலை.."

சந்திரசேகரன் முகம் மாறினார்.

"என்ன ராஜன்..? என்ன சொல்றே..?"

"நான் ஏற்கனவே ஒரு பெண்ணை செலக்ட் பண்ணிட்டேன்.."



"ஈஸிட். வெரி இன்ஸ்ட்ரஸ்டிங் சேப்டர் மை சன். யாரந்தப் பொண்ணு..?" சந்திரசேகரன் மூக்குக் கண்ணாடியை கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு ஆர்வமாய்க் கேட்டார்.

"பொண்ணு பேரு வைஷ்ணவி.."

"வைஷ்ணவி. ரொம்பவும் டிவோஷனல் நேம்.."

"ஒரு கம்பெனியில ரிசப்ஷனிஸ்ட்டா இருக்கா.."

"ரிசப்ஷனிஸ்ட்டா.. அப்ப பொண்ணு இலட்சணமா இருப்பா.."

"யெஸ். பாதர், மதர் கிடையாது."

"வெரி பிட்டி" ராஜேந்திரன் மேற்கொண்டு பேசாமல் தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி அதில் கோர்த்திருந்த லாக்கெட்டைப் பிரித்து சந்திரசேகரனிடம் நீட்டினான்.

வைஷ்ணவி அதில் சிரித்தாள்.

சந்திரசேகரன் பார்த்தார்.

ஒரு நிமிஷம் கழித்து லாக்கெட்டை மூடி செயினை எடுத்து மகனின் கழுத்தில் போட்டார். அவனுடைய தோளைத் தட்டிப் புன்னகைத்தார்.

"ராஜன். உன்னோட லாக்கெட்ல உட்கார்ற அளவுக்கு அவ உன்னோட மனசை ஆக்ரமிச்சிருக்கா. அக்ரி வித் யூ.."

"தேங்க் யூ.. டாட்.."

"அந்தப் பொண்ணைப் பார்த்து நான் பேசணும்.."

"அவ வீட்டுக்குப் போலாமா டாட்.."

"நோ.. உன்னோட வைஷ்ணவி ஐ மீன் என்னோட மருமகள். இன்னிக்கு நம்ம வீட்டு டைனிங் டேபிள்ல உட்கார்ந்து லஞ்ச் சாப்பிட்டு கிட்டே என்னோடு பேசணும்.. ஏற்பாடு பண்ணு.."

"லவ்லி ஃபாதர்.."

சந்தோஷித்தான் ராஜேந்திரன்.

## 9

கல்யாண வீட்டிலிருந்து வெளிப் பட்டாள் வைஷ்ணவி. பட்டுச்சேலை. குங்குமப்பொட்டு. தலை நிறைய மல்லிகை பூ. இப்படி அம்சமாய் இருந்தாலும் அந்த அலங்காரத்தையும் மீறி வைஷ்ணவியின் உடம்பில் தளர்ச்சி தெரிந்தது. கல்யாண வீட்டிலிருந்த உற்சாகம் அவளைத் தொற்றிக் கொள்ள மறுத்தது. முகூர்த்தம் முடிந்ததும் வெளியே வந்தபோது அங்கு நின்றிருந்த கல்யாணப் பெண்ணின் அம்மா "டிபன் சாப்பிட்டுப் போம்மா வைஷ்ணவி.." என்று சொன்னபோது "நான் வந்து சாப்பிட்டுக்கறேன்மா" நாசுக்காய்ச் சொல்லி விட்டு ஆபிஸ் போக பஸ் ஸ்டாப் வந்தாள்.

உடம்பின் ஒவ்வொரு செல்லிலும் நேற்றைய ராத்திரியின் பயங்கரம் உறைந்து



போயிருந்தது. நெஞ்சுக்கூடு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

ராம் தியேட்டர்க்கு எதிரே இருந்த பஸ் ஸ்டாபைத் தொட்டாள்.

பஸ் ஸ்டாப் முழுவதும் காலை நேர நெரிசல் பயிராகியிருந்தது. நீல நிற யூனிபார்ம்களில் கான்வென்ட் குழந்தைகள் தடுமாற்றமில்லாத ஆங்கிலத்தில் அரட்டை யடித்தார்கள். வடபழனி கோயிலுக்குப் போகக் காத்திருந்த இரண்டு மாமிகள் சாந்தியில் நேற்றுப் பார்த்த ஆர்யாவின் படத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். கையில் ப்ரீப்கேஸோடு ஆபிஸ் போகக் காத்திருந்த ஒருத்தர் பஸ் வருகிற வரைக்கும் நேரத்தை வேஸ்ட் செய்யாமல் காதைக் குடைந்து கொண்டிருந்தார். காய்கறிக் கூடைகளோடு நின்றிருந்த கூடைக்காரிகள் போன வாரம் கூடைகளை பஸ்ஸில் ஏற்றாத ஒரு பஸ் கண்டக்டரை கெட்ட வார்த்தைகளில் போஸ்ட்மார்ட்டம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

வைஷ்ணவி ஏராளமான ஆண்களின் பார்வைகளில் கற்பிழந்து பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றாள். தன் அழகான நெற்றியைச் சுருக்கித் தூரத்தில் பஸ் வருகிறதா என்று பார்ப்பதற்காக தலையைத் திருப்பியவளுக்கு லேசான பேரதிர்ச்சி.

சாக்லேட் நிற ஹோண்டா கார் அவளுக்கு வெகு அருகாமையில் நின்றிருக்க உள்ளே இருந்த ராஜேந்திரன் தலையை நீட்டி

"குட்மார்னிங் வைஷ்ணவி.." என்றான்.

வைஷ்ணவி லேசாய் அவனை நெருங்கினாள்.

"என்ன ராஜா. என்னிக்குமில்லாத அதிசயமா பஸ் ஸ்டாப்புக்கு வந்திருக்கீங்க..?"

"மொதல்ல கார்ல ஏறு வைஷ்ணவி.."

வைஷ்ணவி ஏறி உட்கார்ந்தாள். பஸ்ஸுக்குக் காத்திருந்த எல்லா ஆண்களும் ராஜேந்திரனை ஒரு பரம வைரியாய் நினைத்துப் பார்க்க ஹோண்டா நகர்ந்தது.

வைஷ்ணவி பொய்க் கோபத்தோடு அவனைப் பார்த்தாள். "இவ்வளவு வெட்ட வெளிச்சமா நம்ம காதலைக் காட்டிக்கணுமாக்கும்.."

"இனிமே தாராளமாக் காட்டிக்கலாம்.."

வைஷ்ணவி அவனைப் புன்னகையோடு பார்த்தாள். "இன்னிக்கு ரொம்பவும் சந்தோஷமா இருக்கீங்க போலிருக்கு ராஜா.."

"சந்தோஷம்தான். இந்த சந்தோஷம் நேத்தைக்கு ராத்திரி நடந்த சம்பவத்தைக் கூட மறக்கும்படியா பண்ணிடுச்சு வைஷ்ணவி.."

"அப்படியா. அந்த சந்தோஷத்தை எனக்கும் கொஞ்சம் கொடுங்க ராஜா. நேத்தைய சம்பவத்தை மறக்க முடியாம தவிச்சிட்டிருக்கேன்.."



"சொல்றேன்" என்றவன் பெரியார் பாலத்தின் போக்குவரத்து நெரிசலை நீந்தி சுலபமான போக்குவரத்து வந்ததும் சொன்னான்.

"எங்க டாடி டெல்லியிருந்து வந்துட்டாரு."

"அதுக்காக இவ்வளவு சந்தோஷமா..?"

"நம்ம காதலை அவர்கிட்ட டிக்ளேர் பண்ணிட்டேன்."

திடீரென்று தவிப்பானாள் வைஷ்ணவி.

"என்ன சொன்னார்..?"

"இன்னிக்கு மத்தியான லஞ்சுக்கு எங்க வீட்டுக்கு நீ வரப்போறே.. நீயும் நானும் உன்னோட வருங்கால மாமனாரும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடப் போறோம்.."

பதில் சொல்லாமல் உணர்ச்சிகளைக் காட்டாமல் மௌனித்தாள் வைஷ்ணவி. ராஜேந்திரன் பக்கவாட்டில் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"என்ன வைஷ்ணவி. சைலண்ட் ஆயிட்டே.. நான் சொன்னது சந்தோஷமான விஷயம் இல்லையா..?"

கண்களில் குப்பென்று நீர் பனிக்க.. அவன் தோள் மேல் மெல்லச் சாய்ந்தாள் வைஷ்ணவி. "இந்த சந்தோஷமான விஷயத்தை நீங்க சொல்லி நான் அதை அனுபவிக்கற நிலைமையில் இல்ல ராஜா. மனசு பூராவும் தீக்காயம்பட்ட மாதிரி ரணமா

இருக்கு.."

காரின் வேகத்தைக் குறைத்தான் ராஜேந்திரன்.

"இதோ பார் வைஷ்ணவி. நேத்தைக்கு ராத்திரி நடந்த சம்பவம் மோசமான சம்பவந்தான். அதைத்தான் எப்படியோ சமாளிச்சிட்டமே.."

"நாம சமாளிச்சிட்டாலும் இனிமேதான் ஆபத்தே இருக்குன்னு எம்மனசுல ஒரு படபடப்பு ராஜா. அந்த ரௌடியைக் கொலை செஞ்சது யாரு? அவன் எதுக்காக பிணத்தை என்னோட வீட்ல கொண்டு வந்து போடணும்..?"

"வைஷ்ணவி நீ எதையோ நினைச்சு மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. என்ன பிரச்னை வந்தாலும் நான் அதைச் சமாளிப்பேன். நான் உன் பக்கத்துல இருக்கறப்போ நீ எதுக்காகப் பயப்படணும். அடுத்த மாசத்துக்குள்ளே நம்ம கல்யாண மும் நடக்கப் போகுது.."

"ராஜா.."

கன்னப்பரப்பில் நீர் உருண்டு மார்ப்புச் சேலையில் தெறித்தது. "மத்தியானம் எங்க அப்பாகிட்டப் பேசும்போது இப்படி அழுமூஞ்சியா இருக்காதே வைஷ்ணவி. அவர்க்குக் கலகலப்பான சுபாவம் உள்ளவங் களைத்தான் பிடிக்கும். குப்பையை ஒதுக்கித் தள்ளற மாதிரி கவலையை ஒதுக்கிட்டு மனுஷன் சிரிச்சிட்டே



இருக்கணும்னு சொல்லுவார். நீ கொஞ்சம் முகம் வாடினாலும் அவர் உன்னை கண்டு பிடிச்சிடுவார். பி கோர் புல்.."

வைஷ்ணவி கண்ணீரைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டாள். ராஜேந்திரன் சொன்னான். "மத்தியானம் ஆபிசுக்கு லீவு போட்டுடு வைஷ்ணவி. சரியா ஒரு மணிக்கு உன்னோட ஆபிசுக்கு வர்றேன். லஞ்ச் சாப்பிட அப்படியே வீட்டுக்குப் போயிடலாம். சாயந்திரம் அஞ்சு மணி வரைக்கும் வீட்ல அரட்டை. அப்புறம் ஐநாக்ஸ்ல ஒரு படம் பார்க்கப் போறோம்."

"படம் வேண்டாம்.."

"படம் வேண்டாம்னா நீயே ரெண்டாவது சாய்ஸைச் சொல்லு.."

"அஷ்டலட்சுமி கோயிலுக்குப் போகலாம். அப்படியே பீச்ல போயி உட்கார்ந்துடலாம்.."

"சரி. ஒரு கண்டிஷன்."

"என்ன...?"

"நான் போலாம்னு சொல்ற வரைக்கும் பீச்ல உட்கார்ந்திட்டிருக்கணும்.."

"சரி.."

வைஷ்ணவி கொஞ்சம் மகிழ்ச்சியோடு தலையாட்டினாள்.

ஹோண்டா அவளுடைய கம்பெனியை நோக்கிப் பறந்தது.

# 10

**ம**த்தியானம் 1.30 மணி.

காரினின்றும் மிரண்ட பார்வையோடு இறங்கிய வைஷ்ணவியைப் பார்த்து மலர்ந்து பிரமித்தார் சந்திரசேகரன்.

'பயல் சமான்யப்பட்டவனில்லை.'

சரியாய்தான் செலக்ட் செய்திருக்கிறான். காலண்டர்களில் கிருஷ்ணன் ஊதுகிற இசையைக் கேட்டு மயங்குகிற ராதை மாதிரியான தோற்றம் வைஷ்ணவியிடம் உறைந்திருப்பதை உணர்ந்தார் சந்திர சேகரன்.

"வாம்மா வைஷ்ணவி.."

போர்டிகோ படியேறி வந்த வைஷ்ணவி நின்றிருந்த சந்திரசேகரனின் கால்களில் விழுந்து எழுந்தாள். வணக்கம் சொன்னாள்.

சந்திரசேகரன் சிரித்தார்.

"வணக்கம் மாமான்னு சொல்லும்மா.. நீ எப்போ இந்த வாசப்படி ஏறி வீட்டுக்குள்ளே வந்துட்டியோ அந்த நிமிஷமே நீ இந்த வீட்டுக்கு மருமகளாயிட்டே.. போம்மா உள்ளே போ.. ராஜன்.."

"டாட்.."

"வைஷ்ணவியை உள்ளே கூட்டிட்டுப் போ.."

"வா வைஷ்ணவி.." வைஷ்ணவி சங்கோஜத்தோடு ராஜேந்திரனைத்



தொடர்ந்தாள். அவள் இந்த பங்களாவுக்கு வருவது இதுதான் முதல் தடவை. ராஜேந்திரன் எத்தனையோ தடவை தன் அப்பா இல்லாத நேரங்களில் அவளை பங்களாவுக்கு வரச்சொல்லி அழைத்திருக் கிறான். ஆனால் வைஷ்ணவி வர மறுத்து விடுவாள்.

"உங்கப்பா என்னைக்கு நம்ம கல்யாணத்துக்கு சம்மதிச்சு என்னை வரச் சொல்றாரோ அப்போ வர்றேன் ராஜா. என்னைக் கம்பெல் பண்ணாதீங்க.." இந்த வாக்கியத்தை அடிக்கடி சொல்லி ராஜேந்திரனிடமிருந்து நழுவியிருக்கிறாள் வைஷ்ணவி.

"என்ன வைஷ்ணவி. பங்களா உனக்குப் பிடிச்சிருக்கா...?" நடந்துகொண்டே அவள் காதருகே கிசுகிசுத்தான் ராஜேந்திரன்.

பங்களாவைப் பார்த்துப் பிரமித்துப் போயிருந்தாள் வைஷ்ணவி.

"யப்பா.. இதென்ன பங்களாவா.. இல்ல அரண்மனையா? பெண்டாஸ்டிக் ராஜா. நீங்க உண்மையிலேயே ராஜாதான்." அதே கிசுகிசுப்பான குரலில் சொன்னாள்.

"சன்.."

"டாட்.."

"வைஷ்ணவியை நேரா டைனிங் டேபிளுக்குக் கூட்டிட்டுப்போ. ரெண்டு பேரும் சாப்பிட்டுட்டு ஹாலுக்கு வாங்க."

"டாட் நீங்க..?"

"எனக்கு இங்கிதம் தெரியும் மைடியர் சன். நானும் உங்ககூட உட்கார்ந்தா வைஷ்ணவி சங்கோஜத்துல சாப்பிட மாட்டா. அவளுக்கு ஒரு ப்ரீனஸ் கிடைக்காது. நீ கூட்டிட்டுப் போய் சாப்பிட வை.."

"தேங்க் யூ டாட்.."

"பார்த்தியா உனக்கே எவ்வளவு சந்தோஷம்னு" ராஜேந்திரனும் வைஷ்ணவியும் சிரித்துக் கொண்டே பங்களாவின் உள்ளே இருந்த டைனிங் ஹாலை நோக்கிப் போனார்கள்.

அவர்கள் சாப்பிட்டு முடித்து திரும்பவும் ஹாலுக்கு வந்தபோது சோபாவில் உட்கார்ந்திருந்த சந்திரசேகரனுக்கு எதிரே குடும்ப ஜோஸ்யர் முருகப்பா பஞ்சாங்கத்தையும், பேப்பரையும் வைத்துக் கொண்டு எதையோ எழுதிக் கொண்டிருந்தார். ராஜேந்திரனைப் பார்த்ததும் எழுந்து ஒரு அவசரக் கும்பிடு ஒன்றைப் போட்டு விட்டு உட்கார்ந்தார்.

"வாம்மா வைஷ்ணவி. நல்லாச் சாப்பிட்டியா?"

வெட்கத்தோடு தலையாட்டினாள்.

"இப்படி வந்து உட்காரம்மா.."

"என்ன டாட்.. ஜோசியர் வந்திருக்கார்?"

"முகூர்த்த தேதியைப் பிக்ஸ் பண்ண வேண்டாமா சன்..?"



"ரொம்ப வேகமாப் போறீங்க டாட்.." சந்தோஷத்தோடு தலையாட்டிக் கொண்டே வைஷ்ணவியோடு எதிர் சோபாவில் போய் உட்கார்ந்தான் ராஜேந்திரன்.

சந்திரசேகர் ஜோசியரை விரட்டினார்.

"இந்த மாசத்துக்குள்ளே எனக்கு முகூர்த்த தேதி வேணும் ஜோஸ்யரே. நல்லாப் பார்த்துச் சொல்லும்."

ஜோஸ்யர் வைஷ்ணவியை ஏறிட்டார்.

"ஏம்மா. உனக்கு ஜாதகம் இருக்கா..?"

வைஷ்ணவி தடுமாற்றமாய் "இல்லை" என்று சொல்ல ஜோசியர் விடாமல் கேட்டார்.

"உன்னோட ஜென்ம நட்சத்திரம் என்னன்னு தெரியுமாம்மா..?"

வைஷ்ணவி வாயைத் திறந்து பதில் சொல்வதற்குள் சந்திரசேகரன் விருட்டென்று ஜோசியரைப் பார்த்துச் சீறினார்.

"எதுக்காக அந்தப் பொண்ணுகிட்ட ஜாதகம், ஜன்ம நட்சத்திரம்னு கேட்கறீங்க?"

"பொருத்தம் பார்க்கலாமேன்னுதான்.."

"நீர் என்னய்யா.. இனி புதுசா பொருத்தம் பார்க்கறது. அவங்களுக்குள்ளதான் ஏற்கனவே பொருத்தம் ஏற்பட்டுப்போச்சே.. கண்டகண்டதைக் கிளறிப் பார்க்காம முகூர்த்தத் தேதியைக் குறியுமய்யா..."

"கேட்டது தப்பாயிருந்தா மன்னிக்கணும்." சொல்லிவிட்டு பஞ்சாங்கத்தைப் புரட்டி

தேதிகளை பார்க்க ஆரம்பித்தார் ஜோஸ்யர். இரண்டு நிமிஷங்களைச் செலவழித்தபின் சொன்னார்.

"இந்த மாசம் இருபத்தோராம்தேதி பேஷான முகூர்த்தம் இருக்கு.."

"அதுக்கு முன்னாடி.." லேசாக இழுத்தார் சந்திரசேகரன்.

"அவ்வளவு சிலாக்கியமான முகூர்த்த மில்லை.."

"சரி. இருபத்தோராம் தேதியே முகூர்த்தம் வெச்சிடலாம்.." என்று உற்சாகத்துடன் கையைச் சொடுக்கியவர் "ராஜன்.." என்றார்.

"டாட்.."

"ஆபட்ஸ்பரிக்குப் போன் பண்ணி இந்த தேதியில மண்டபம் காலியா இருக்கான்னு கேளு.. ஆபட்ஸ்பரி அவெய்லபிளா இல்லேன்னா ராஜேஸ்வரியை டிரை பண்ணு.." ராஜேந்திரன் நகர் அவர் மறுபடியும் சொன்னார். "இன்னிக்கு சாயந்திரத்துக்குள்ள மண்டபத்தை பிக்ஸ் பண்ணியாகணும் ராஜன்.."

"எஸ் டாட்.."

வைஷ்ணவி பிரமிப்போடு உட்கார்ந்திருந்தாள்.

"அம்மா வைஷ்ணவி.." சந்திரசேகர் கூப்பிட்டார்.

"ம்.."



"இந்த ஊர்ல உனக்கு சொந்தக்காரங்க யாராவது இருக்காங்களாம்மா..?"

'இல்லை' என்பதுபோல தலையாட்டினாள்.

"சொந்த ஊர்ல.."

"இருக்காங்க. ஆனா யரையும் கூப்பிட நரன் பிரியப்படலை சார்.."

"சார்னு சொல்லாதேம்மா, மாமான்னு சொல்லு.."

"சரிங்க மாமா.." என்றாள் வைஷ்ணவி புன்னகையோடு..

## 11

**க**ல்யாணம் நிச்சயமாகிவிட்ட சந்தோஷத்தில் முந்தின இரவின் விபரீதத்தை சுத்தமாய் மறந்து விட்டு அஷ்டலட்சுமி கேயிலுக்கும், பீச்சுக்கும் போய் ராத்திரி பத்து மணி வரைக்கும் பொழுதைப் போக்கிவிட்டு திரும்பினார்கள் ராஜேந்திரனும், வைஷ்ணவியும். கார் வைஷ்ணவியின் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

"ராஜா.. உங்க ஃபாதர் நிஜமாகவே ஒரு ஜெம்தான். என்னோட பேமிலியைப் பத்தி விசாரிக்கலை. நான் என்ன ஜாதின்னும் அவர் கேட்கலை. கல்யாணத்தை நிச்சயம் பண்ணிட்டார். எனக்கு எல்லாமே பிரமிப்பாக இருக்கு.."

ராஜேந்திரன் சிரித்தான்.

"அவரோட ஆக்டிவிட்டீஸ் பூராவும் இப்படித்தான் இருக்கும் வைஷ்ணவி. கம்பெனியில எல்லோருக்கும் ஏகப்பட்ட இன்க்ரிமென்ட் கொடுப்பாரு. ஏதாவது ஒரு டூரை அரேன்ஞ் பண்ணி பேட்ச் பேட்ச்சா போய்ட்டு வரச் சொல்லுவாரு. அவர்க்கு ஒரு காரியம் சந்தோஷத்தைத் தருதுன்னா அதை உடனடியாக செய்வார். அவர்க்கு உன்னை ரொம்பவும் புடிச்சிருக்கு.. அதான் அந்த வேகம்.."

கார் கோடம்பாக்கம் பாலத்தை தாண்டியது.

வைஷ்ணவியின் மனசுக்குள் பழைய கவலை வந்து உட்கார்ந்தது. 'அந்த வீட்டிற்குள் போய் தனியாகப் படுக்க வேண்டுமே!' என்ற நினைப்பில் லேசாய் நடுங்கினாள். பின்னங்கழுத்து வியர்த்தது. காரை ஓட்டிக் கொண்டிருந்த ராஜேந்திரன் திரும்பினான்.

"என்ன வைஷ்ணவி திடீர்னு மௌனமா ஆயிட்டே..."

"வீட்டுக்குப் போகவே பயமாயிருக்கு.."

"அப்போ நம்ம வீட்டுக்கே போயிடலாம் வா.."

"ச்சீ.. உங்கப்பா என்னைப் பத்தி என்ன நினைப்பார் ராஜா. இருபத்தியொன்றாம் தேதிக்கு மேலதான் உங்க வீடு என்னோட வீடா மாறும். அதுவரைக்கும் நான் அந்நியம்தான். என்னை வீட்ல ட்ராப்



பண்ணிட்டு போங்க.."

"இதோ பார் வைஷ்ணவி. நீ பயப்படறதுல எந்த அர்த்தமும் இல்ல. தைரியமா இரு. ஏதாவது ஹெல்ப் வேணும்னா என்னைக் கூப்பிடு.."

தலையாட்டினாள் வைஷ்ணவி.

கார் அவள் வீடு இருந்த தெருவுக்குள் நுழைந்து ஆள் நடமாட்டம் இல்லாத அந்த நீண்ட தெருவில் வேகமாய்ப் போய் வீட்டின் முன் நின்றது.

வைஷ்ணவி இறங்கினாள்.

ராஜேந்திரன் கையசைத்தான். "குட் நைட் வைஷ்ணவி. நாளைக்குக் காலையில ஒன்பது மணிக்கு பஸ் ஸ்டாப் வர்றேன். அவசரப்பட்டு பஸ்ஸில் போய்டாதே.."

"ம்.."

கார் நகர அதையே பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவி அது தெரு முனையைத் தாண்டியதும் டம்பப் பையில் இருந்த சாவியை எடுத்துக் கொண்டு வாசற்படி ஏறினாள்.

நெஞ்சுக்கூடு அதிர ஆரம்பித்தது.

தெருவே நிசப்தத்தில் ஆழ்ந்து போயிருக்க சுற்றுமுற்றும் பார்த்தபடி கதவை நெருங்கி பூட்டைத் திறந்தாள்.

கதவு க்ர்ர்ர்.. என்று உள்ளே போனது.

இருட்டில் மெதுவாக நடந்து போய்

சுவரிலுள்ள ஸ்விட்ச்சைத் தாட்டினாள். மெயின் போர்டில் போயிருந்த ப்யூஸை காலையிலேயே விமாலாவின் அப்பா சரி செய்து கொடுத்திருந்ததில் விளக்கு பளிச்சிட்டது.

கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்தாள்.

நடு அறையின் சுவிட்ச்சையும் தட்டி விட்டாள். சில விநாடிகளுக்குப் பின் ட்யூப்லைட் உயிர் பிடித்துக் கொண்டு குபுக்கென்று எரிந்து அறையை வெளிச்சத்தில் நிரப்பியது.

ட்ரம் வாசிக்கற இருதயத்தோடு பெட்ரூமுக்குள் நுழைந்து கட்டியிருந்த சேலையைக் களைந்து விட்டு வேறு சேலைக்குப் போக முயன்றாள்.

திடீரென்று அந்த வீச்சம் வீசியது.

அழுகின வீச்சம்.

விநாடிக்கு விநாடி வீச்சம் அதிகமாய் நாசியைத் தொட அறையை விட்டு வெளியே வந்தாள் வைஷ்ணவி.

வீட்டின் பின் பக்கமிருந்துதான் அந்த வீச்சம் வந்து கொண்டிருந்தது.

எச்சில் விழுங்கி நெற்றி வியர்த்து இருதயம் தெறித்து விடுவதைப் போல் விம்மி விம்மி துடிக்க வீட்டின் பின்கட்டை நோக்கி மெதுவாய்ப் போனாள்.

போகப்போக..



அந்த அழுகின வீச்சம் குடலைப் புரட்டியது. சேலைத் தலைப்பில் மூக்கைப் பொத்திக் கொண்டு அடிமேல் அடி வைத்து பின்புறக் கதவைப் போய்த் திறந்தாள்.

தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள்.

உடம்பின் நரம்புகள் அனைத்தும் சுரீரென்று மடங்கிப்போக –

அதிர்ந்தாள். மறுபடியும் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்.

கிணற்று மேடைச்சுவர்க்கு முட்டுக் கொடுத்தபடி ராஜாக்கிளியின் பிணம் உட்கார்ந்திருக்க அருகேயிருந்த குழி தோண்டப்பட்டு மண் பூராவும் மேலே வந்திருந்தது. காற்று பூராவும் கொட்டி யிருந்தது.

வீலென்று அலறப்போன வைஷ்ணவி தன் வாயையே பொத்திக் கொண்டள். விழிகள் நிலைகுத்திப் போயிருக்க ராஜாக்கிளியின் பிணத்தையே பார்த்தாள்.

உடம்பு பூராவும் மண் அப்பியிருக்க நீர் கசிந்து நொதநொதவென்று உப்பியிருந் தான் ராஜாக்கிளி. தலை தொய்ந்திருந்தது. வெள்ளை விழிகள் பிதுங்கி வெளியே தொங்கியது.

'வீட்டில் இல்லாத நேரம்..'

'யாரோ வந்து ராஜாக்கிளியின் பிணத்தை தோண்டி வெளியே எடுத்திருக்கிறார்கள். கிணற்று மேடைக்கு சாய்வாக உட்கார

வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.'

மார்புப் பிரதேசம் புராவும் தடாதடவென்று அதிர்ந்து கொள்ள பின்பக்கக் கதவைப் படீரென்று மூடினாள் வைஷ்ணவி.

முகம் வியர்வையை வழிய விட பெருமூச்சு விட்டாள்.

'என்ன செய்யலாம்?'

'வீட்டைப் பூட்டிக்கொண்டு போய் ராஜாவுக்குப் போன் செய்யலாமா?'

'வேறு வழி?'

சேலைத் தலைப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டு நடு அறைக்குப் போகத் திரும்பினாள் வைஷ்ணவி. சட்டென்று அந்த சத்தத்தை உணர்ந்தாள்.

வீட்டிற்குள் யரோ மெலிதாய் இருமும் சத்தம்.

வைஷ்ணவியின் வயிற்றுக்குள் ஐஸ்கட்டி ஒன்று புரண்டது. "யாரது..?" கால்களை மெல்ல நகர்த்தி மிரண்ட கண்களோடு சுற்றுமுற்றும் பார்த்தபடி படுக்கை அறையை எட்டிப் பார்த்தாள்.

படுக்கை அறைக்குள் யாருமில்லை. சுற்று முற்றும் பார்த்துவிட்டு திரும்பினாள். அடுத்த விநாடி இதயம் பிய்த்துக் கொண்டு போவதைப் போல் எகிற 'த்தட்' என்று அதிர்ந்தாள்.

எதிரேயிருந்த குளியலறைக் கதவைத்



திறந்து கொண்டு நல்ல உயரத்தில் அவன் வெளிப் பட்டான்.

கண்களைக் கவ்விய கூலிங்கிளாஸ்.

மோவாயில் அடர்த்தியில்லாத தாடி.

புடைத்துப் போயிருந்த மூக்கின் மேல் கறுப்பாய் அசிங்கமாய் ஒரு மரு. முன் வரிசைப் பற்களில் இரண்டு பற்கள் காணாமல் போயிருக்க அவன் இளித்தான். கேட்டான்.

"என்ன வைஷ்ணவி... ராஜாக்கிளியையே பார்த்துட்டிருக்கே. பயந்துட்டியா..?"

"நீ...நீ..நீ..யாரு..?" கேட்டுக் கொண்டே பின்னுக்கு நகர்ந்தாள். அவன் அவளை நோக்கி வந்தான்.

"என்ன வைஷ்ணவி. என்னை உனக்குத் தெரியலையா? இந்த மூணு மாசமா நீ எங்கே போனாலும் உன் பின்னாடியே வந்துட்டிருக் கேன். என்னை நீ ஒரு வாட்டிகூடப் பார்க்கலையா?"

"இல்...இல்ல.."

"அதெப்படி நீ என்னைப் பார்த்திருக்க முடியும்? உனக்குத்தான் அந்த ராஜேந்திரனோட மயக்கம் அதிகமாய் இருக்கே. என்னை மாதிரியான மூஞ்சியை யெல்லாம் நீ சீந்துவியா..?"

"நீ..நீ.. யாரு.. நிஜமா எ...எ..எனக்குத் தெ..தெரியலை.."

"சொல்றேன்.. சொல்லத்தானே வந்து இருக்கேன். எம்பேர் ஜாக்கி பிலிப்ஸ். எல்லாக் கெட்ட பழக்கம் தெரிந்து வைத்திருக்கிற ஒரு இம்மாரல் கிறிஸ்டியன். ரொம்பவும் அவசியமான காரியங்களுக்கு சில கொலைகளைப் பண்ணியிருக்கேன். அந்த ராஜாக்கிளியைக் கொன்னு உன்னோட வீட்ல கொண்டு வந்து போட்டதுக்கும் ஒரு அவசியம் இருக்கு. இந்த ராஜாக்கிளியைப் பத்தி நாலு பேருக்கு மட்டும் தெரியும். முதல் நபர் நீ. ரெண்டாவது அந்த ராஜேந்திரன். மூணாவது நான். நாலாவது நபர் மகேஷ்குமார்."

வைஷ்ணவி திகிலோடு அவனைப் பார்த்தாள்.

"மகேஷ்குமாரா..? யாரது?"

"என்னோட பாஸ். அழகான பெண்களைப் பார்த்தா உடனே ஆராதிக்கற ரகம். ஆனா உன்னை மேரேஜ் பண்ணிக்கவே ஆசைப் படறார்."

"என்ன உளர்றே..?"

"நான் உளறலை வைஷ்ணவி. உண்மையைச் சொல்றேன். என்னோட பாஸ் மகேஷ்குமாருக்கு உன்னை பிடிச்சிருக்கு. இந்த அழகான உடம்பு வேற யாருக்கும் போய்டக்கூடாதுன்னு நினைச்சு உன்னைக் கல்யாணம் பண்ணிக் ஆசைப்படறார். ஆனா நீ ஆல்ரெடி என்கேஜ்ட்னு அவர்கிட்டச் சொல்லி உன்னோட ராஜேந்திரனைப்



பத்தியும் சொன்னேன். அவர் கேட்கலை. அந்தக் காதலை வெட்டி முறின்னு சொன்னார். உங்க காதலைச் துண்டு போடச் சமயம் பார்த்துட்டிருந்தேன். ரெண்டு நாளைக்கு முன்னாடி மகாபலிபுரத்துல ராஜாக்கிளி உன்கிட்ட பண்ணின அடாவடித் தனத்தை ஒரு முக்கிய அம்சமா எடுத்துட்டு காரியத்துல இறங்கினேன். ராஜாக்கிளியைத் தீர்த்துக்கட்டி நேத்தைக்கு ராத்திரி உன் வீட்ல கொண்டு வந்து போட்டேன். ராஜாக்கிளி கொலையான விஷயம் வெளியே வந்தா மாட்டிக்கப் போற முதல் ஆளு உன்னோட ராஜேந்திரன்தான்..."

அவன் பேசப்பேச -

பயத்தில் உறைந்து போனாள் வைஷ்ணவி.

ஜாக்கி பிலிப்ஸ் தொடர்ந்தான். "நீ அந்த ராஜேந்திரனைத்தான் கல்யாணம் பண்ணு வேன்னு அடம் பிடிச்சா இந்த ராஜாக்கிளி கொலை விஷயம் நாளைக்கே வெளியே வந்திரும். கிணற்று மேடையில இருக்கற ராஜாக்கிளியோட பிணம் மறுபடியும் குழிக்குள்ளே போகணும்னா நீ மகேஷ் குமாருக்கு கழுத்தை நீட்டணும். உன்னோட சாய்ஸ் எதுன்னு எனக்குத் தெரிஞ்சாகணும்.."

"நோ..."

தலையைப் பலமாய் ஆட்டினாள் வைஷ்ணவி. ஜாக்கி பிலிப்ஸ் சிரித்தான். "இப்போ யாருக்கு நோ சொன்னே

வைஷ்ணவி. ராஜேந்திரனுக்கா.. இல்ல மகேஷ்குமாருக்கா.."

"ராஜாவை இந்த ஆபத்துல மாட்ட வெச்சிடாதே.. அவரொட குடும்பம் மரியாதைப் பட்ட குடும்பம்.."

"அப்படின்னா நான் சொல்றதைக் கேளு.."

"என்ன..?"

"மகேஷ்குமாரை நீ கல்யாணம் பண்ணிக் கணும். நான் நினைச்சா உன்னை இப்பவே மகேஷ்குமார் இருக்கற இடத்துக்குக் கொண்டு போக முடியும். ஆனா எல்லாமே முறைப்படி நடக்கணும். யார்க்கும் எந்த சந்தேகமும் வரக்கூடாதுன்னு மகேஷ்குமார் சொல்லியிருக்கிறார். இன்னிக்கு செவ்வாய்க் கிழமை. நாளை கழிச்சு மறுநாள் வியாழக் கிழமை உனக்கும் மகேஷ்குமாருக்கும் திருநீர்மலையில கல்யாணம். அன்னிக்கு சாயந்திரம் ஹோட்டல் சோழாவில் கிராண்ட் ரிசப்ஷன். நாளையிலேருந்து நீ அந்த ராஜேந்திரனைப் பார்த்துப் பேசறதை நிறுத்தணும்."

விக்கித்துப் போனாள் வைஷ்ணவி.

ஜாக்கி பிலிப்ஸ் அவளுடைய தோள் பட்டையை உசுப்பினான்.

"என்ன சொல்றே...?"

"என்னோட ராஜாவைப் பார்த்து நான் பேசக் கூடாதா?"

"ஆமா.."



"அவர் நாளைக்கு என்னைத் தேடிட்டு வந்துடுவாரே.."

"வந்தா மூஞ்சியில அடிச்ச மாதிரி எதையாவது பேசி அனுப்பிடு.."

"நோ. அப்படியெல்லாம் என்னால பேச முடியாது.."

"நீ அப்படிப் பேச முடியாதுன்னா அவன் போலீஸ் லாக்கப்புக்குப் போக வேண்டியது தான் வைஷ்ணவி. உனக்கு என்னோட பாஸ் மகேஷ்குமாரைப் பத்தித் தெரியாது. போலீஸ் ஹை அப்பீஷியல்ஸ் நிறையப் பேரை அவருக்குத் தெரியும். ராஜாக்கிளியைக் கொலை பண்ணினது ராஜேந்திரன்தான்னு நிரூபிச்சு அவனை தூக்குக் கயிறு வரைக்கும் கொண்டு போயிடுவார். ராஜேந்திரனோட உயிரும், அவனோட குடும்ப மரியாதையும் மிஞ்சணும்னா நீ மகேஷ்குமாருக்குக் கழுத்தை நீட்டணும்.."

வைஷ்ணவி தளர்ந்துபோய் சுவரோரமாய் உட்கார்ந்தாள்.

பின்பக்கமிருந்த ராஜாக்கிளி காற்றின் வேகத்தால் இன்னமும் அதிகமாய் நாறினான். ஜாக்கி பிலிப்ஸ் அறையில் நடை போட்டான்.

நடைபோட்டபடியே பேசினான்.

"நான் இப்போ உன்கிட்டப் பேசின எந்த [illegible] ...ரனுக்கோ.. இல்ல.. வேற யாருக்கோ தெரிஞ்சா என் கையால சாகப்போறது அந்த ராஜேந்திரன் தான். அவன் உயிரோட இருக்கறதும்

இல்லாததும் உன்னோட கையில்தான் இருக்கு.."

"அ..அவரை ஒண்ணும் பண்ணிடாதே.."

"நீ என்னோட வார்த்தைக்கு விசுவாசமா இருந்தா நா அவனை ஒண்ணும் பண்ண மாட்டேன். அவன் பாட்டுக்கு வேற எந்தப் பொண்ணையாவது பார்த்துக் கல்யாணம் பண்ணிட்டுச் சந்தோஷமா இருக்கட்டும்.. அவனோட சந்தோஷம்தானே உனக்கு வேணும்.."

"ஆமா.."

"அப்படின்னா நாளைக்கு சாயந்திரம் அஞ்சு மணிக்கு உன்னோட ஆபிசுக்கு ஒரு கார் வரும். கார்ல ஏறி நீ நேரா மகேஷ்குமார் கிட்ட வந்திரு. மறுநாள் காலையிலே திருநீர்மலையில கல்யாணம்."

"வ..வ..வர்றேன்.."

வைஷ்ணவியின் கண்களில் கண்ணீர் உடைப் பெடுத்தது. ஜாக்கி பிலிப்ஸ் தன் சொரசொரப்பான கையினால் வைஷ்ணவியின் மோவாயை நிமிர்த்தினான்.

"புத்திசாலித்தனமா காரியம் பண்றதா நினைச்சிட்டு போலீசுக்குப் போயிடாதே. அப்படிப் போனா நீயே ராஜேந்திரனைக் கொலை பண்றதுக்குச் சமம்.."

தீர்க்கமாய்த் தலையை ஆட்டினாள் வைஷ்ணவி. "போக மாட்டேன்."

"ராஜாக்கிளியை மறுபடியும் குழிக்கு



அனுப்பிட்டு நான் புறப்படறேன். நீ ஏதாவது தகராறு பண்ண ஆரம்பிச்சா ராஜாக்கிளி மறுபடியும் மேலே வந்து கிணத்து மேட்டுல உட்கார்ந்துக்க ஆரம்பிச்சிடுவான்.."

சொல்லிக்கொண்டே ஜாக்கி பிலிப்ஸ் வீட்டின் பின் பக்கம் போனான்.

சில பல சப்தங்கள்.

பத்து நிமிஷத்துக்குப் பிறகு -

கைகளில் ஒட்டியிருந்த மணலைத் தட்டி விட்டுக் கொண்டே உள்ளே வந்தான். "நான் புறப்படறேன் வைஷ்ணவி. சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். விஷயம் வெளியே கசிஞ்சா உன் பக்கந்தான் சேதம். நாளைக்கு சாயந்திரம் உன்னோட ஆபீசுக்கு கார் வரும். ரெடியாய் இரு.."

"ம்.."

மிரட்சியோடு தலையடிய ஆட்டினாள் வைஷ்ணவி.

ஜாக்கி பிலிப்ஸ் வீட்டின் பின் பக்கச் சுவரை நோக்கிப் போனான். "எப்படி வந்தேனோ.. அப்படியே போயிடறேன்.."

சொல்லிக்கொண்டே சுவரின் விளிம்பைப் பற்றி மேலே ஏறி மறுபக்கமாய்ச் சத்தமில்லாமல் குதித்தான்.

## 12.

"ராஜன்."

கூப்பிட்டுக் கொண்டே ராஜேந்திரனின்

அறைக்குள் நுழைந்தார் சந்திரசேகரன். ட்ரஸ்ஸிங் டேபிள் முன் நின்று செண்ட்டைப் போட்டுக் கொண்டிருந்த ராஜன் மணக்க மணக்கத் திரும்பினான்.

"எஸ் டாட்.."

"ஆபீசுக்குப் புறப்பட்டுட்டியா..?"

"ஆமா.."

"ஒரு பத்து நிமிஷம் இப்படி உட்கார்ந்து வி.ஐ.பி. இன்விடேஷன் ப்ரூப்பைப் பார்த்துட்டுப் போயேன்."

"அதுக்குள்ளே ப்ரூப் வந்திடுச்சா டாட்.."

"ப்ரூப்பையும் பார்த்துக் குடுத்துட்டின்னா சாயந்திரத்துக்குள்ளே இன்விடேஷன் வந்திரும்.. நாளையிலிருந்து இன்விடேஷன் கொடுக்கறதை ஆரம்பிச்சிடலாம்..."

ராஜேந்திரன் தன் கையிலிருந்த வாட்ச்சைப் பார்த்தான்.

மணி 8.45

பஸ் ஸ்டாப்பில் இந்நேரம் வைஷ்ணவி காத்திருப்பாள்.

இவ்வளவு ஆர்வமாய் கல்யாண காரியங்களைச் செய்கிற அப்பாவையும் தட்டிக் கழிக்க முடியாது. யோசித்துக் கொண்டே வந்து நாற்காலியில் உட்கார்ந்து ப்ரூப்பைப் பார்க்க ஆரம்பித்தான். சந்திரசேகரன் அவனருகில் வந்து உட்கார்ந்தார்.



"ராஜன்.."

"என்ன டாட்..?"

"கல்யாணத்துக்கு இன்னும் பதினைந்து நாள்தான் இருக்கு. கவனிக்க வேண்டிய காரியமோ நிறைய இருக்கு.. நீ ஆபிசுக்குப் போனதும் என்ன பண்றே.. ஆபிஸ ஸ்டாப்ல ஒரு பதினைந்து பேரைச் செலக்ட் பண்ணி அவங்ககிட்ட சில பொறுப்புகளைக் கொடு.."

"சரி டாட்."

"அப்புறம்.. சன் உன்கிட்ட இன்னொரு விஷயத்தையும் பேசணும்.."

"சொல்லுங்க டாட்.."

"வைஷ்ணவி இப்போ எந்தக் கம்பெனியில வேலை பார்த்துட்டிருக்கா..?"

சொன்னான் ராஜேந்திரன்.

"இனிமே வைஷ்ணவி வேலைக்குப் போக வேண்டாம்னு நான் ஃபீல் பண்றேன். அவகிட்ட இதைப் பத்திப் பேசி இன்னிக்கோ நாளைக்கோ ரெசிக்னேஷன் கொடுத்துடச் சொல்லு.."

"சரி டாட்.."

தலையாட்டிக் கொண்டே ப்ரூப்பைப் பார்த்து முடித்தான் ராஜேந்திரன். மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்தான்.

8:55

கிளம்பினான்.

"சாயந்திரம் கொஞ்சம் சீக்கிரம் வந்திரு ராஜன்."

"ஓ.கே. டாட்..."

போர்டிகோவில் நின்றிருந்த தன் ஹோண்டாவை நோக்கிப் போனான். ப்ரீப்கேஸைப் பின் சீட்டில் எறிந்துவிட்டு ஸ்டீயரிங்கைப் பிடித்தான்.

உச்சக்கட்ட வேகத்தில் சீறிக்கொண்டு வந்து..

கோடம்பாக்கம் தொட்டு..

பஸ் ஸ்டாப்பை நெருங்கினான்.

வைஷ்ணவி ஆப்செண்ட்.

நேற்றைக்குப் பார்த்த அதே கூடைக் காரிகளும், கான்வெண்ட் மாணவிகளும் பஸ் ஸ்டாபில் தெரிய வைஷ்ணவி காணாமல் போயிருந்தாள்.

ராஜேந்திரன் காரை ரோட்டோரமாய் நிறுத்தி காத்திருக்க ஆரம்பித்தான். வந்த இரண்டொரு பஸ்களும் பஸ் ஸ்டாபில் நின்றிருந்த கூடைக்காரிகளையும், மாணவி களையும் அள்ளிக்கொண்டு போய்விட பஸ் ஸ்டாப் வெறிச்சிட்டது.

வாட்ச்சைப் பார்த்தான்.

மணி 9.10

'வைஷ்ணவி வீட்டிலிருந்து புறப்பட்டு



வந்தாளா இல்லையா..?' மனசுக்குள் சந்தேகம் நெருட காரை நகர்த்தி வைஷ்ணவி குடியிருந்த தெருவுக்குள் நுழைந்து அவள் வீட்டை நோக்கிப் போனான்.

வீடு வந்தது.

வீட்டுக் கதவில் பெரிதாய் பூட்டு தொங்கியது.

ஏராளமாய் ஆச்சர்யப்பட்டுக் கொண்டே காரை திருப்பி மறுபடியும் மெயின் ரோட்டுக்கு வந்தான்.

அதே வெறிச்சிட்ட பஸ்ஸ்டாப்.

'வைஷ்ணவி ஆபிஸ் போயிருப்பாளா?'

'போன் செய்து பார்க்கலாமா?'

மனசில் ஓடிய எண்ணங்களோடு பவர் ஸ்டேஷன் அருகேயிருந்த ஊனமுற்றோர் டெலிபோன் பூத்தை நெருங்கினான்.

இடது கை சூம்பிப்போன அந்த டெலிபோன் பூத் இளைஞனிடம் நெம்பரைச் சொல்லி அவன் டயல் செய்து ரிஸீவரைத் தந்தான்.

மறுமுனையில் வைஷ்ணவி வேலை செய்யும் கம்பெனியின் டெலிபோன் ஆபரேட்டர் கிடைத்தார். "மிஸ் வைஷ்ணவி ஆபீஸ் வந்துட்டாங்களா?"

ஆர்வமாய்க் கேட்டான் ராஜேந்திரன்.

"நீங்க யார் பேசறது..?"

ஆபரேட்டர் சந்தேகத் தொனியில் கேட்க ராஜேந்திரன் சொன்னான்.

"வைஷ்ணவியோட ஷட் பி பேசறேன்."

"அவங்க இன்னிக்கு ஆபீஸ் வர மாட்டாங்க சார். காலையிலேயே வந்து லீவு சொல்லிட்டுப் போயிட்டாங்க.."

ஆச்சர்யத்தின் உச்சிக்குப் போனான் ராஜேந்திரன்.

"வைஷ்ணவி இன்னிக்கு ஆபிஸுக்கு லீவு போட்டிருக்காளா?" குழப்பமாய் ரிசீவரை வைத்துவிட்டு காசைக் கொடுத்து விட்டு காருக்கு வந்தான் ராஜேந்திரன்.

ஏறி உட்கார்ந்து காரைக் கிளப்பினான். ஒரு சின்ன நெருப்புக் கங்கு மாதிரி இதயம் பூராவும அந்தக் கேள்வி ஓடியது.

'வைஷ்ணவி லீவு போட்டுவிட்டு எங்கே போனாள்?'

முதன் முதலாய் அவன் அடிவயிற்றுக்குள் ஒரு பயம் முளை விட்டது.

## 13

ஏ.ஸி. அறையிலும் வியர்க்க ஆரம்பித்தது ராஜேந்திரனுக்கு.

பார்த்துக் கொண்டிருந்த பைல்களில் பார்வை இல்லாமல் எங்கோ வெறித்தது. வயிற்றுக்குள் ஒரு இனம் புரியாத கலவரம். அவஸ்தையான உணர்வு.

'வைஷ்ணவி எங்கே போயிருப்பாள்?'



அவளுடைய ஆபீசுக்கு மறுபடியும் போன் செய்து வைஷ்ணவி என்ன காரணத்துக்காக லீவு கோரியிருக்கிறாள் என்று கேட்டான். 'பிசிகலி நாட் வெல்' என்று காரணம் சொன்னார்கள்.

சோர்ந்து போய் ரிசீவரை வைத்தான் ராஜேந்திரன்.

ஆபிஸ் ஜி.எம். உள்ளே வந்தார்.

"சார். ஸ்டோர் பார்ட்டீஸ் ரெண்டு பேர் உங்களைப் பார்க்கப் பிரியப்படறாங்க. உள்ளே அனுப்பட்டுமா?"

"நீங்களே பேசி அனுப்பிடுங்க.."

"கம்பெனி ஆடிட்டர் வெயிட் பண்றார்.."

"அவரையும் நீங்களே பேசி அனுப்பி விடுங்க."

"ஓ.கே. சார்.."

மானேஜர் அறையை விட்டு நகர கனமான மனசோடு ரிவால்விங் நாற்காலியில் சாய்ந்து லேசாய்ச் சுற்றினான்.

இன்டர்காம் சங்கீதமாய் சினுங்கியது.

ரிசீவரை எடுத்தான்.

"சார். உங்களுக்குப் போன். ஒன் மிஸ் வைஷ்ணவி." என்று ஆபீஸ் ரிசப்ஷனிஸ்ட் சொல்லச் சொல்லவே பரபரத்தான்.

"கெட் மீ கனெக்ஷன் க்விக்.."

இணைப்பு கிடைத்ததும் வைஷ்ணவி

யின் குரல் கேட்டது.

"ஹலோ.. ராஜா.."

பலஹீனமான உற்சாகம் இழந்த குரல்.

ராஜேந்திரன் நிஜமாகவே கோபப்பட்டான்.

"என்ன வைஷ்ணவி. எங்கே போயிட்டே:.?"

"என்ன ராஜா எம்மேல கோபமா..?"

"கோபம் இல்லாம.. இப்ப நீ எங்கேருந்து பேசறே..?"

"மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனி லிருந்து.."

"மாம்பலம் ஸ்டேஷனா.. அங்கே எதுக்குப் போனே..?"

"ராஜா.."

"ம்.."

"இப்போ ஆபிஸ்ல நீங்க ப்ரீதானே...?"

"ஆமா.."

"உடனே மாம்பலம் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு வாங்க.."

"என்ன விஷயம்..?"

"நேர்ல வாங்க சொல்றேன்.."

சொல்லிவிட்டு ரிசீவரைப் பட்டென்று வைத்து விட்டாள் வைஷ்ணவி. ராஜேந்திரன் நாற்காலியினின்றும் எழுந்து கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு



வெளியே வந்தான்.

ஆபிஸ் ஊழியர்கள் மொத்தமும் அவனையே திரும்பிப் பார்க்க அவன் அதைப் பொருட்படுத்தாமல் போர்டிகோவில் நின்றிருந்த ஹோண்டா காருக்குள் பாய்ந்தான்.

ஹோண்டா க்க்யூர் என்று சீறி ஆபிஸ காம்பவுண்ட்டை விட்டு வெளியே வந்து ரோட்டைத் தேய்த்ததது. ஸ்பீடா மீட்டரில் முள் அலைந்தது.

மவுண்ட்ரோட்டின் பதினொரு மணி போக்குவரத்தின் நெரிசலில் ஊர்ந்து தி.நகரை ஊடுருவி மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனைத் தொட்டான் ராஜேந்திரன்.

காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான்.

ஸ்டேஷன் வெறிச்சோடிப் போயிருந்தது.

பிளாட்பார டீ ஸ்டாலில் மட்டும் இரண்டு பேர் டீயை உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள். ராஜேந்திரன் நாலாப்புறம் பார்வையைச சுழற்றிக் கொண்டே நடந்தான். திடீரென்று பிரகாசமானான். ஸ்டேஷன் கோடியில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் -

வைஷ்ணவி தெரிந்தாள். கையில் தினசரி ஒன்றை வைத்திருந்தாள்.

"வைஷ்ணவி.."

வேகவேகமாய் அவளை. நோக்கிப போனான். அவளை நெருங்கியதும்

வார்த்தைகளில் கோபம் வெடித்தது.

"என்ன வைஷ்ணவி.. இந்த நேரத்துல இங்க வந்து உட்கார்ந்துட்டிருக்கே..?"

"ரா...ராஜா..."

அவள் நகர்ந்து அவன் உட்கார இடம் கொடுத்தாள்.

"உனக்கு என்னாச்சு வைஷ்ணவி.. ஏன் இப்படி பிகேவ் பண்றே..?"

"ராஜா இன்னிக்கு ஹிண்டு பேப்பர் பார்த்தீங்களா?"

"இல்லையே.. ஏன்..?"

"பாருங்க.."

பேப்பரைப் பிரித்து லெட்டர்ஸ் டு த எடிட்டர் பகுதியைக் காண்பித்தாள்.

"நீங்க எழுதிப் போட்ட அந்த ராஜாக்கிளி ரௌடி சம்பவம் பப்ளிஸ் ஆகியிருக்கு பார்த்தீங்களா..?"

"இதைக் காட்டத்தான் மாம்பலம் ஸ்டேஷன் வரச் சொன்னியா..?"

"இல்ல ராஜா.. இன்னொரு முக்கியமான விஷயமும் இருக்கு.."

"என்ன..?"

"ராஜாக்கிளியைக் [illegible] என்னோட வீட்ல கொண்டு வந்து போட்ட[illegible]வனை நேத்தைக்கு ராத்திரி நான் வீட்லேயே சந்திச்சேன்."



நெற்றியைச் சுருக்கினான் ராஜேந்திரன்.

"யாரவன்..?"

"அதை நான் சொல்ல விரும்பலை ராஜா. என்கிட்ட இருக்கற அழகே எனக்கு எதிரியாய் மாறியிருக்கு. நிறைய விரோதிகளைச் சம்பாதிச்சுக் கொடுத்திருக்கு..."

"நீ என்ன செல்றே வைஷ்ணவி..?"

"நான் சொல்றது உங்களுக்கு எதுவுமே புரிய வேண்டாம் ராஜா. உங்களுக்குப் புரிஞ்சிட்டா அதுவே ஆபத்தா மாறிடும். நான் இந்த ஜென்மத்துல உங்களோடு சேர்ந்து வாழ முடியாத ஒரு நிர்பந்தம் இருக்கு.."

"வைஷ்... என்ன உளர்றே...?"

"ராஜா.."

"ம்.."

"நீங்க எனக்கொரு சத்தியம் பண்ணித் தரணும்."

"என்ன வைஷ்ணவி. என்னென்னமோ பேசறே.."

வைஷ்ணவி புன்னகைத்ததாள்.

"சத்தியம் பண்ணுவீங்களா..? மாட்டீங்களா..?"

"சரி.. ப்ராமிஸ்.."

"நான் செத்துட்டா நீங்க தற்கொலை பண்ணிக்கக் கூடாது ராஜா.."

"எதுக்கு இப்படியெல்லாம் பேசறே

வைஷ்ணவி. இந்த மாசம் இருபத்தோறாம் தேதி நம்ம கல்யாணம். அப்பா எவ்வளவு ஆர்வமாய் இருக்கார் தெரியுமா?"

"சாரி ராஜா.. இன்னும் அஞ்சு நிமிஷத்துல நான் சாகப்போறேன். ஸ்டேஷன் ப்ளாட் பாரத்துல உங்க தலையைப் பார்த்ததுமே சயனைட் கோட்டிங் காப்ஸ்யூல்களைப் போட்டுகிட்டேன். நான் வேலை செய்யற கம்பெனியே மருந்துக் கம்பெனிதானே.. அதான் அங்கிருந்தே எடுத்துக் கிட்டு வந்தேன்."

"வைஷ்ணவீ...ஈ..ஈ..ஈ...ஈ..........."

அலறிக் கொண்டு அவளைத் தூக்க முயன்றான் ராஜேந்திரன்.

வைஷ்ணவி சோர்வோடு சவப் புன்னகை பூத்தாள். "நீங்க என்னை எடுத்துகிட்டு ப்ளாட்பாரம் தாண்டறதுக்குள்ளே நான் செத்துடுவேன் ராஜா. யாரோட தொந்தரவும் இல்லாம இந்த கூட்டம் இல்லதத ரயில்வே ஸ்டேஷன்ல உங்களப் பார்த்துகிட்டே உங்க மடியிலயே செத்துப் போக ஆசைப்படறேன்.."

"வை.வைஷ்..ணவி..."

"மா..மாவுக்கு என்னோட கடைசி வணக்கத்தைச் சொல்லுங்க ராஜா.."

"வைஷ்ணவி... வைஷ்ணவி.. நீ எதுக்காக என்னை விட்டுப் போறே.. எனக்கு ஒன்னும் புரியலையே..."



ராஜேந்திரன் கதறித் தீர்த்துக் கொண்டிருக்கும் போதே வைஷ்ணவி மெல்ல மெல்ல சாவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள்.

பார்வை மட்டும் ராஜேந்திரன் மீது அழுத்தமாய் பதிந்திருக்க -

உயிர் மட்டும் ஓசைப்படாமல் பிரிந்து கொண்டிருந்தது.

(முடிந்தது)

## நம் காதல் தேசிய கீதம்

என் மரணம் மட்டும்
உனை மறக்க வைக்கும்
மறுஜென்மம்கூட உனை நினைக்க வைக்கும்
உயிர் உன்னைச் சுற்றியே
பறக்க நினைக்கும்..
நீ கட்டளையிட்டால்
கட்டுப்படுவதற்கும்
கட்டியணைப்பதற்கும்
கத்தி எடுப்பதற்கும்
உயிரின் உயிராய் என்றும் இருப்பேன்...
காற்றே...
எதற்கும் கலங்காதே!
உன் கண்ணின் கருவிழியாய் நானிருப்பேன்
உனைச் சீண்டுவோர்க்கு எமனாய் இருப்பேன்
காற்றே எதற்கும் கலங்காதே!
உயிர்க்காற்றே எதற்கும் கலங்காதே...

**- மனுமயன்**